15.2.2010

# பகுதி IV


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | 2009ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டம் | I |
| 2. | 2009ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம் | VI |
| 3. | 2009ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் | VIII |
| 4. | 2009ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, சேர் பெறுமதிவரி (திருத்தச்) சட்டம் | VIII |
| 5. | 2009ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டம் | XIV |
| 6. | 2009ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க, பற்றுக்கள் வரி (திருத்தச்) சட்டம் | XV |
| 7. | 2009ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம் | XVI |
| 8. | 2009ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் | XVIII |
| 9. | 2009ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டம் | XXVI |
| 10. | 2009ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க, இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழு (திருத்தச்) சட்டம் | XXVII |
| 11. | 2009ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க, பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல் சட்டம் | XXVIII |
| 12. | 2009ஆம் ஆண்டின் 55ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதிய (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் | XXXVII |

## 2009ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டம்

[2009 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 11 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

**இச்சட்டம் ஏற்புடையதாகின்ற ஒவ்வோர் ஆளினதும் பொறுப்பாகக்கூடிய மொத்த வரவின்மீது நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி என அழைக்கப்படவேண்டிய வரியொன்றை விதிப்பதற்கும் சேகரிப்பதற்கும் ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

1. இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென் பதுடன் 2009 பெப்புருவரி 1 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வந்திருப்பதாக கருதப்படுதலும் வேண்டும்.

2.(1) இச்சட்டத்தின் ஏற்பாடுகள்,-

(அ) இலங்கைக்குள் பயணிகளின் தனிப்பட்ட பயண மூடையில் உள்ளடங்கியுள்ள பொருள் தவிர்ந்த ஏதேனும் பொருளை இறக்குமதிசெய்கின்ற, ("பயணமூடை" என்பது (235 ஆம் அத்தியாயமான) சுங்கக்கட்டளைச் சட்டத்தின் 107அ என்னும் பிரிவில் உள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்); அல்லது

(ஆ) ஏதேனும் பொருளை உற்பத்திசெய்தல் என்ற தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற; அல்லது

(இ) ஏதேனும் விவரணத்தினதான சேவையொன்றை வழங்குகின்ற தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற;

ஒவ்வோராளுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளொவ்வொருவரும், இச்சட்டத்தில் இதன்பின்னர் "இச்சட்டம் ஏற்புடையதாகின்ற ஆள்" எனக் குறிப்பீடுசெய்யப்படுதல் வேண்டும்.

3. (1) (இதனகத்துப்பின்னர் "வரி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி " என அழைக்கப்படவேண்டிய வரியொன்று, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, ஒரு சதவீதம் என்ற வீதத்தில் கணக்கிடப்பட்டு, இச்சட்டம் ஏற்புடையதாகின்ற ஒவ்வோர் ஆளிடமிருந்தும் பின்வரும் முறையில் இறுக்கப்படுதல் வேண்டும் :-

(i) 2009, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் இலங்கைக்குள் ஏதேனும் பொருளை இறக்குமதி செய்கின்றவரும், 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவருமான ஆளொருவரின் விடயத்தில், அத்தகைய பொருளை இலங்கைக்குள் இறக்குமதி செய்வதிலிருந்து எழுகின்ற அத்தகைய ஆளின் பொறுப்பாகக்கூடிய மொத்த வரவு தொடர்பில் வரியானது இறுக்கப்படற்பாலதாதல் வேண்டும்; அத்துடன்

(ii) இரண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் அல்லது (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவரின் விடயத்தில், (இதனகத்துப்பின்னர் "இயைபான காலாண்டு" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2009, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஒவ்வொரு காலாண்டுக்கும், அத்தகைய இயைபான காலாண்டுக்காக அத்தகைய ஆளின் பொறுப்பாகக் கூடிய மொத்த வரவு தொடர்பில் வரியானது இறுக்கப் படற்பாலதாதல் வேண்டும்.

(2) இப்பிரிவில் "பொறுப்பாகக்கூடிய மொத்தவரவு" என்பது,-

(i) ஏதேனும் பொருளை இறக்குமதி செய்வதிலிருந்து எழுகின்றதாய் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட எவரேனுமாள் தொடர்பாக, 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் சேர்பெறுமதி வரியின் நோக்கத்துக்காக நிச்சயிக்கப்பட்ட அப்பொருளின் பெறுமதி என்று பொருளாகும்

(ii) இரண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட எவரேனுமாள் மற்றும் இயைபான ஏதேனும் காலாண்டு தொடர்பாக, அத்தகைய ஆளினால் இலங்கையில் உற்பத்திசெய்யப்பட்ட ஒவ்வொரு பொருளினதும் அக்காலாண்டிலான விற்பனையிலிருந்து பெறப்படற்பாலதான, அது பெறப்பட்டிருப்பினுஞ்சரி பெறப்படாதிருப்பினுஞ்சரி, பணத்தொகை என்று பொருளாகும்;

(iii) இரண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட எவரேனுமாள் மற்றும் இயைபான ஏதேனும் காலாண்டு தொடர்பாக, அப்பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் சேவையை இலங்கையில் வழங்குவதிலிருந்து பெறப்படற்பாலதான, அது பெறப்பட்டிருப்பினுஞ்சரி பெறப்படாதிருப்பினுஞ்சரி, பணத்தொகை என்று பொருளாகும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அப்பிரிவின் (ii) ஆம் அல்லது (iii) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட, இச்சட்டம் ஏற்புடையதாகின்ற எவரேனுமாளின் இயைபான ஏதேனும் காலாண்டுக்கான பொறுப்பாகக்கூடிய மொத்த வரவு பின்வருவனவற்றை உள்ளடக்குதலாகாது :-

(i) அக்காலாண்டில் அத்தகைய ஆளினால் உறப்பட்ட ஏதேனும் அறவிடமுடியாக் கடன் ;

(ii) அவ்வியைபான காலாண்டில் செலுத்தப்பட்ட 2002ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் கீழான ஏதேனும் சேர்பெறுமதி வரி ;

(iii) அக்காலாண்டில் செலுத்தப்பட்ட 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்திவரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான ஏதேனும் உற்பத்திவரி :

ஆயின், எவ்வாறாயினும், இயைபான ஏதேனும் காலாண்டில் அறவிடப்பட்ட ஏதேனும் அறவிடமுடியாக் கடன், அவ்வியைபான காலாண்டின் இயைபான மொத்தவரவில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்

(4) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், இயைபான ஏதேனும் காலாண்டுக்காக, 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் அல்லது (இ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட எவரேனுமாளிடமிருந்து பின்வரும் சந்தர்ப்பங்களில் வரியானது இறுக்கப்படற்பாலதாதலாகாது :-

(i) அவ்வியைபான காலாண்டுக்காக அத்தகைய ஆளின் பொறுப்பாகக்கூடிய மொத்தவரவு ஆறு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவான பணத்தொகையை விஞ்சாதிருப்பின்;

(ii) அத்தகைய ஆள், 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச்சட்டத்தின் அத்தியாயம் IIIஆ என்பதன்கீழ் அவ்வியைபான காலாண்டுக்காக விருப்புச்சார் சேர்பெறுமதி வரியைச் செலுத்தியிருப்பின்.

4. இரண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் அல்லது (இ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளொருவராகவுள்ள இச்சட்டம் எந்த ஆளுக்கு ஏற்புடையதாகின்றதோ அந்த ஆள் ஒவ்வொருவரும், இயைபான ஏதேனும் காலாண்டுக்காக அவர்மீது வரிமதிப்பீடெதுவும் செய்யப்பட்டிருக்கவில்லையென்பது எவ்வாறிருப்பினும்,-

(i) அவ்வியைபான காலாண்டுக்காகச் செலுத்தப்படற்பாலதான வரியின் மூன்றிலொன்றுக்குச் சமமானவொரு தொகையை, அவ்வியைபான காலாண்டின் இரண்டாம் மாதத்தினது இருபதாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர்;

(ii) அவ்வியைபான காலாண்டுக்காகச் செலுத்தப்படற்பாலதான வரியின் மூன்றிலொன்றுக்குச் சமமானவொரு தொகையை, அவ்வியைபான காலாண்டின் மூன்றாம் மாதத்தினது இருபதாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர்; அத்துடன்

(iii) அவ்வியைபான காலாண்டுக்காகச் செலுத்தப்படற்பாலதான வரியின் மீதிக்குச் சமமானவொரு தொகையை, அவ்வியைபான காலாண்டின் முடிவை உடனடுத்துவருகின்ற மாதத்தின் இருபதாம் நாளன்று அல்லது அதற்குமுன்னர்,

ஆணையாளர் தலைமையதிபதியினால் அதற்கெனக் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையில் அவரிடம் செலுத்துதல் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கத்துக்காக, இயைபான ஏதேனும் காலாண்டு தொடர்பாக "செலுத்தப்படற்பாலதான வரியின் மூன்றிலொன்று" என்னும் சொல்லமைப்பு, அவ்வியைபான காலாண்டுக்காகப் பொறுப்பாகக்கூடிய மொத்த வரவாகவுள்ளதென அத்தகைய ஆளினால் மதிப்பிடப்பட்ட பணத்தொகைமீது கணக்கிடப்பட்ட வரியின் மூன்றிலொன்று என்று பொருளாகும்.

5. (1) சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி, 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒவ்வோர் ஆளிடமிருந்தும், அத்தகைய ஆளினால் இறக்குமதி செய்யப்பட்ட ஒவ்வொரு பொருள் தொடர்பிலும் அத்தகைய ஆளிடமிருந்து இறுக்கப்படற்பாலதான வரியை அத்தகைய பொருள் இறக்குமதி செய்யப்படும் நேரத்தில் சேகரித்தல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு சேகரிக்கப்பட்ட தொகையைக் குறித்துரைத்து, அத்தகைய பொருள் தொடர்பான இறக்குமதிப் பொருட்பதிவேட்டின்மீது புறக்குறிப்பொன்றைச் செய்தலும் வேண்டும்.

(2) இச்சட்டம் ஏற்புடையதாகின்ற எவரேனுமாளினால் இறக்குமதிசெய்யப்பட்ட ஏதேனும் பொருள் தொடர்பாக இப் பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கிணங்க, சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் சேகரிக்கப்பட்ட ஏதேனும் தொகை, அத்தகைய பொருளின் இறக்குமதியிலிருந்து எழுகின்ற பொறுப்பாகக்கூடிய மொத்த வரவு தொடர்பில் இறுக்கப்படற்பாலதான வரியாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தொகை எந்நாளன்று அவ்வாறு சேகரிக்கப்பட்டதோ அந்நாளன்று அத்தகைய ஆளினால் ஆணையாளர் தலைமையதிபதியிடம் செலுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் சேகரிக்கப்படற்பாலதான ஏதேனும் தொகை, அத்தகைய தொகையைச் சேகரிக்கும் மற்றும் அறவிடும் நோக்கத்துக்காகவும் இச்சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், சுங்கக் கட்டளைச்சட்டத்தின்கீழ் இறுக்கப்படற்பாலதான சுங்கத்

தீர்வையாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க, சுங்கக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள், அத்தகைய தொகையைச் சேகரிப்பதற்கும் அறவிடுவதற்கும் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(4) இலங்கைக்குள் இறக்குமதிசெய்யப்பட்ட ஏதேனும் பொருள்-

(i) சுங்கக்கட்டளை சட்டத்தின்கீழ் சேகரிக்கப்படற்பால தான ஏதேனும் தீர்வையை, அறவீட்டை அல்லது ஏதேனும் இறுப்பனவை அறவிடுவதற்காகச் சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியினால்; அல்லது

(ii) 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபைச் சட்டத்தின்கீழ் சேகரிக்கப்படற்பாலனவான எவையேனும் வருமதிகளை அறவிடுவதற்காக, அச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபையினால்; அல்லது

(iii) ஆணையாளர் தலைமையதிபதியினால்,

விற்பனைசெய்யப்படுமிடத்து, அத்தகைய பொருளைக் கொள்வனவு செய்பவர், 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளொருவராகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க அவருக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

6. இரண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளொருவராகவுள்ள இச்சட்டம் எந்த ஆளுக்கு ஏற்புடையதாகின்றதோ அந்த ஆள் ஒவ்வொருவரும்-

(i) ஐந்தாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் பயனைக் கொண்டு, இயைபான ஏதேனும் காலாண்டில், அவரினால் இறக்குமதிசெய்யப்பட்ட ஏதேனும் பொருள் தொடர்பிலான வரியைச் செலுத்தியுள்ளாரெனக் கருதப்படுமிடத்து ;

(ii) அப்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட வேறோர் ஆளிடமிருந்து அவரினால் கொள்வனவு செய்யப்பட்ட ஏதேனும் பொருள் தொடர்பில் 4 ஆம் பிரிவின்கீழான வரியைச் செலுத்தியுள்ளவிடத்து,

இரு விடயங்களிலும் அத்தகைய பொருள் புறநீங்கலாக அவரது தொழிலில் அல்லது உற்பத்தியில் பயன்படுத்தப்படும் பொருளொன்றாகவிருத்தல் வேண்டும், அவர், அவ்வியைபான காலாண்டுக்காக 4 ஆம் பிரிவின்கீழ் செலுத்தப்படற்பாலதான வரிக்கெதிராக அவ்வாறு செலுத்தப்பட்ட வரிக்கான வரவுக்கு உரித்துடையவராதல் வேண்டும் :

ஆயின், இயைபான ஏதேனும் காலாண்டுக்கான அத்தகைய வரவு, அக்காலாண்டுக்காக அவ்வாறு செலுத்தப்படற்பாலதான வரியை விஞ்சுமிடத்து, விஞ்சுதொகையானது, அவ்வியைபான காலாண்டை உடனடுத்து வருகின்ற இயைபான காலாண்டுக்காக 4 ஆம் பிரிவின்கீழ் செலுத்தப்பட்ட முன்கூட்டிய வரிக்கொடுப்பனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

7. இரண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் அல்லது (இ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளொருவராகவுள்ள இச்சட்டம் எந்த ஆளுக்கு ஏற்புடையதாகின்றதோ அந்த ஆள் ஒவ்வொருவரும், இயைபான ஏதேனும் காலாண்டுக்காக அவரின் பொறுப்பாகக்கூடிய மொத்தவரவு 3 ஆம் பிரிவின், (4) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட பணத்தொகையை விஞ்சுகின்றதுமான பொறுப்பாகக்கூடிய ஆள் ஒவ்வொருவரும், அவ்வியைபான காலாண்டின் கடைசி மாதத்தின் பதினைந்தாம் நாளுக்குப் பிந்தாமல், அக்காலாண்டுக்காக வரிக்கான அவரது இறுக்கப்படற்பாலதாந்தன்மை பற்றி ஆணையாளர் தலைமையதிபதிக்கு எழுத்தில் அறிவித்தல் கொடுத்தல் வேண்டும். அந்த அறிவிப்பானது, பெயரையும், அஞ்சல் முகவரியையும், வரிசெலுத்துநர் ஆளடையாள இலக்கம் ஏதேனுமிருப்பின் அதனையும், அல்லது வருமானவரிக் கோப்பு இலக்கம் ஏதேனுமிருப்பின் அதனையும், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் ஆணையாளர் தலைமையதிபதி குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய வேறு தகவலையும் வெளிக்காட்டுதல் வேண்டும்.

8. உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் விவரத்திரட்டுகள் முதலியன தொடர்பாக XII ஆம் அத்தியாயத்தின் 106, 107, 108 மற்றும் 112 ஆகிய பிரிவுகளிலுள்ள ஏற்பாடுகள், வரிமதிப்பீடுகள் தொடர்பாக அத்தியாயம் XXII, மேன்முறையீடுகள் தொடர்பாக அத்தியாயம் XXIII வரிமதிப்பீடுகளின் இறுதியானதன்மையும் பிழையான விபரத்திரட்டுகளுக்கான தண்டமும் தொடர்பாக அத்தியாயம் XXIV, தவணை தவறிய வரியும் அதனுடன் சேர்க்கப்பட்டுள்ள தொகைகளும் தொடர்பாக அத்தியாயம் XXV, வரி அறவிடுதல் தொடர்பாக அத்தியாயம் XXVI , பல்லினமானவை தொடர்பாக அத்தியாயம் XXVII, தண்டங்களும் தவறுகளும் தொடர்பாக அத்தியாயம் XXIX, நிருவாகம் தொடர்பாக அத்தியாயம் XXXஇன் 209 ஆம் பிரிவு, மற்றும் பொது அத்தியாயம் XXXI என்பன, பின்வரும் திரிபுகளுக்கமைய, இச்சட்டத்தின்கீழ் விவரத்திரட்டுகளைக் கொடுத்துதவுதல், வரிமதிப்பீடுகள், வரிமதிப்பீடுகளுக்கெதிரான மேன்முறையீடு, வரிமதிப்பீடுகளின் இறுதியானதன்மையும் பிழையான விபரத்திரட்டுகளுக்கான தண்டமும், தவணை தவறிய வரியும் அதனுடன் சேர்க்கப்பட்டுள்ள தொகைகளும், வரி அறவிடுதல், பல்லினமானவை, தண்டங்களும் தவறுகளும், நிருவாகம் மற்றும் பொது என்பவற்றுக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும் :-

(அ) உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் அத்தகைய ஏதேனும் ஏற்பாட்டில் வரிமதிப்பீட்டாண்டு பற்றிய ஒவ்வொரு குறிப்பீடும், இச்சட்டத்திலுள்ள "இயைபான காலாண்டு"க்கான குறிப்பீடொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்˙

(ஆ) உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் அத்தகைய ஏதேனும் ஏற்பாட்டில் வரிமதிப்பிடற்பாலதான வருமானம் பற்றிய ஒவ்வொரு குறிப்பீடும், இச்சட்டத்திலுள்ள "பொறுப்பாகக்கூடிய மொத்தவரவு"க்கான குறிப்பீடொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(இ) உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் அத்தகைய ஏதேனும் ஏற்பாட்டில் வருமானவரி பற்றிய ஒவ்வொரு குறிப்பீடும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி இறுக்கப்பட்டு அறவிடப்பட்ட வரிக்கான குறிப்பீடொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

9. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

10. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய,-

"பொருள்" என்பது, எவையேனும் பண்டங்களை, பொருட் கூறை அல்லது ஏதேனும் கமத்தொழில் அல்லது தோட்டக்கலை விளைச்சலை உள்ளடக்கும், ஆனால் இச்சட்டத்துக்கான அட்டவணையின் I ஆம் பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தவிர்க்கப்பட்ட பொருளை உள்ளடக்காது ;

"ஆட்கள் குழு", "தொழில்", "ஆணையாளர் தலைமையதிபதி" மற்றும் "கம்பெனி" என்பன, உண்ணாட்டரசிறைச் சட்டத்தில் அவற்றுக்குள்ள அதே, முறையான கருத்துக்களைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"உண்ணாட்டரசிறைச் சட்டம்" என்பது, 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம் என்று பொருளாகும்

"தயாரித்தல்" என்பது-

(i) பொருள் ஒன்றைச் செய்வதற்கு;

(ii) இரசாயன முறை வழியிலாயினுஞ்சரி வேறு வகையிலாயினுஞ்சரி ஏதேனும் பொருளைக் கோத்திணைப்பதற்கு அல்லது பொருத்துவதற்கு;

(iii) ஏதேனும் பொருளை விற்பனைக்கென இசைவாக்கம் செய்வதற்கு;

(iv) சில்லறைக் கடையொன்றில் பிரத்தியேகமாகவும் நேரடியாகவும் பாவனையாளருக்கு விற்பனை செய்யும் நோக்கத்திற்காக அத்தகைய கடையிற்தவிர வேறு வகையில் சிப்பம் செய்வதற்கு, போத்தலிலடைப் பதற்கு, பெட்டிகளினுள் இடுவதற்கு, துண்டுகளாக வெட்டுவதற்கு, சுத்தம் செய்வதற்கு, மினுக்குவதற்கு, சுற்றுவதற்கு, சுட்டுத் துண்டிடுவதற்கு அல்லது எத்தகையதுமான வேறு ஏதேனும் விதத்தில் தயார் செய்வதற்கான,

ஏதேனும் முறைவழி எனப் பொருள்படும்;

"ஆள்" என்பது, ஏதேனும் கம்பெனியை, ஆட்களின் குழுவை அல்லது ஏதேனும் பங்காண்மையை உள்ளடக்கும்;

"காலாண்டு" என்பது, ஏதேனும் ஆண்டின் சனவரி, ஏப்பிறல், யூலை அல்லது ஒற்றோபர் மாதத்தின் முதலாம் நாளன்று தொடங்கும் மூன்று மாதங்களைக்கொண்ட காலப்பகுதி என்று பொருள்படும்:

ஆயின், 2009 பெப்புருவரி முதலாம் திகதியன்று தொடங்குவதாக கருதப்படும் காலாண்டு இரண்டு மாதங்களை உள்ளடக்குதல் வேண்டும்;

"சேவை" என்பது, இச்சட்டத்துக்கான அட்டவணையின் பாகம் II இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் விலக்களிக்கப்பட்ட சேவையை உள்ளடக்கமாட்டாது;

அட்டவணை

பாகம் I

*எதிர்பார்க்கப்படும் பொருட்கள்*

(i) ஏதேனும் பொருளின் உற்பத்தியாளரால் ஏற்றுமதி செய்யப்படும் அத்தகைய பொருள்

(ii) எவரேனும் ஆளினால் பிரத்தியேகமாக ஏற்றுமதிக்கான ஏதேனும் பொருளில் அல்லது அதன் உற்பத்திக்கென இறக்குமதி செய்யப்படும் பொறி, பொறித்தொகுதி அல்லது பிணைச்சல்கள் அல்லாத ஏதேனும் பொருள்;

(iii) ஏதேனும் பொருளின் ஏற்றுமதி தொடர்பில் இலங்கையிலுள்ள ஏதேனும் வங்கியில் திறக்கப்பட்ட கடனுறுதிப் பத்திரமொன்றை அல்லது பொருள் உண்மையில் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டது என்பதற்கான வேறு ஆவணச்சான்று முன் வைப்பதன்மீது ஆணையாளர் தலைமையதிபதி திருப்தியுறுவாராயின், இச்சட்டம் எந்த ஆளுக்கு ஏற்புடைத்தாகின்றதோ அந்த எவரேனும் ஆளினால் விற்பனை செய்யப்படும் ஏதேனும் பொருள்;

(iv) ஏதேனும் பொருள் -

(i) பொருட்காட்சியொன்றில் வெளிக்காட்டி வைப்பதற்கு;

(ii) அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் கருத்திட்டத்தில் இலங்கையில் தற்காலிகப் பாவனைக்கு ;

(iii) அப்பொருளுக்கு இலங்கையில் மேற்கொள்ளப்படவுள்ள பழுதுபார்த்தல்களின் நோக்கத்திற்கு ; அல்லது

(iv) அதனையொத்த வேறு ஏதேனும் நோக்கத்திற்கும் அத்துடன் அத்தகைய பொருள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டு காலப்பகுதியொன்றுக்குள் மீளவும் கப்பலேற்றப்படவிருப்பின் ;

(v) ஏதேனும் பொருள் அதன் இறக்குமதிக்கு முன்னா் பழுதுபார்த்தலுக்காக இலங்கைக்கு வெளியே எடுத்துச் செல்லப்பட்டதென சுங்கப் பணிப்பாளா் தலைமையதிபதி திருப்தியுறும் வகையில் எண்பிக்கப்படுமாயின் ஏதேனும் பொருள் ;

(vi) இலங்கையில் தயாரிக்கப்பட்டு தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் அங்கீகாரத்துடன் மேலும் முறைவழிப்படுத்துவதற்காக அல்லது அச்சடிப்பதற்காக இலங்கைக்கு வெளியே எடுத்துச் செல்லப்படும் ஏதேனும் திரைப்படவியல் படச்சுருள் அல்லது தொலைக்காட்சி நாடகம் ;

(vii) ஏதேனும் விமான நிறுவனத்தால் அல்லது கப்பற்போக்குவரத்துக் கம்பெனியால் இறக்குமதி செய்யப்பட்ட ஏதேனும் உதிரிப்பாகம் சா்வதேசப் போக்குவரத்துக்குப் பயன்படுத்தப் படுவதும் அத்தகைய விமான நிறுவனத்தால் அல்லது கப்பற் போக்குவரத்துக் கம்பெனியால் ஏதேனும் வானூர்தியை அல் லது கப்பலைப் பேணுவதற்குப் பயன்படுத்தப்படவுள்ளது என ஆணையாளா் தலைமையதிபதி திருப்தியுறும் வகையில் எண்பிக்கப்படுமாயின் அத்தகைய ஏதேனும் உதிரிப்பாகம் ;

(viii) ஐக்கிய நாடுகளின் தாபனத்திற்கு அல்லது அத்தகைய தாபனத்தின் ஏதேனும் தனித்துவம்பெற்ற முகவராண்மைக்கு அல்லது ஏதேனும் வெளிநாட்டு அரசாங்கத்தின் இராசதந்திரத் தூதரகத்திற்கு அல்லது அத்தகைய தூதரகத்தின் இராசதந்திரப் பணியாட்தொகுதியின் உறுப்பினருக்கு இராசதந்திர தூதுவரின் அந்தஸ்திலிருப்பதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சரின் விதப்புரையின்மீது அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆளுக்கு விற்பனை செய்யப்படும் ஏதேனும் பொருள்;

(ix) ஏதேனும் பொருள் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின்கீழ் அறவிடப்படும் விசேட வியாபாரப் பண்ட அறவீட்டிற்கு அமைந்ததாயின் அத்தகைய பொருள் ;

(x) பசளை ;

(xi) பெற்றோலியம் மற்றும் பெற்றோலிய உற்பத்திப்பொருள்கள் ;

(xii) எரிவாயு ;

(xiii) ஔடதப் பொருட்கள் ; அத்துடன்

(xiv) 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபை தேசிய அரசுப் பேரவைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைத் தேயிலை சபையில் பதிவுசெய்யப்பட்ட உற்பத்தியாளரொருவராகவுள்ள உற்பத்தியாளரால் கொழும்பு தேயிலை ஏலமிடும் இடங்களில் விற்பனைக்கென எவரேனும் பதிவுசெய்யப்பட்ட தரகருக்கு நிரம்பல் செய்யப்பட்ட தேயிலை.

## பாகம் II

*எதிர்பார்க்கப்படும் சேவைகள்*

பின்வரும் சேவைகள் -

(i) வங்கித் தொழில் அல்லது நிதியியல் தொழில்

(ii) மின்சாரம் வழங்கல் ;

(iii) மருத்துவ சேவைகள் ;

(iv) நீா் வழங்கல் ;

(v) பண்டங்களினதும் பயணிகளினதும் போக்குவரத்து ;

(vi) அசைவுள்ள ஆதனங்களின் குத்தகை ;

(vii) உப ஒப்பந்தக்காரா் ஒருவராக அல்லாத நிர்மாண ஒப்பந்தக்காரா் ஒருவரின் சேவை, அத்தகைய சேவைகள் ஏதேனும் கட்டிடத்தின், வீதியின், பாலத்தின், நீா் வழங்கலின், வடிகாலமைப்பின் அல்லது கழிவுநீா் வடிகால் முறைமையின், துறைமுகத்தின், விமானநிலையத்தின் அல்லது தொலைத்தொடா்பில் அல்லது மின்சாரத்தில் ஏதேனும் உட்கட்டமைப்புக் கருத்திட்டத்தின் நிர்மாணம் தொடா்பிலானவையாக இருக்குமளவுக்கு ;

(viii) ஏதேனும் பொருளின் எவரேனும் ஏற்றுமதியாளருக்கு வழங்கப்படும் சேவைகள்; அதாவது அத்தகைய பொருளின் தரத்தையும் பண்பையும் மேம்படுத்துதலோடு நேரடியாகத் தொடா்புடைய சேவைகள் ;

(ix) எவரேனும் ஆடை ஏற்றுமதியாளருக்கு வழங்கப்படும் ஆடைகள் தைக்கும் சேவைகள் ;

(x) கேள்வு அனுப்புநர் ஒருவரின், 1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கப்பற் தொழில் முகவர்களுக்கு உரிமமளித்தல் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட கப்பற் தொழில் முகவர் ஒருவரின் அல்லது தனியஞ்சல் சேர்ப்பிப்போன் ஒருவரின் சேவைகள், அத்தகைய சேவைகள் இலங்கையிலிருந்து ஏதேனும் பொருளின் ஏற்றுமதியாளர் தொடர்பிலானதாயிருக்குமளவுக்கு ;

(xi) பகிரங்கக் கூட்டுத்தாபனம் ஒன்றினால் வழங்கப்படும் சேவைகள், அத்தகைய சேவைகள் இலங்கையிலிருந்து ஏதேனும் பொருளின் இறக்குமதியின் தொடர்பிலானதாயிருக்குமளவுக்கு ;

(xii) ஒரு ஹோட்டல், விருந்தினர் விடுதி, உணவகம் ஒன்றை அல்லது அதனையொத்த வேறு தொழிலை நடத்துதல், அத்தகைய ஹோட்டல், விருந்தினர் விடுதி, உணவகம் அல்லது அதனையொத்த வேறு தொழில் இலங்கை சுற்றுலாப் பயண அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவுசெய்யப்பட்டிருக்குமாயின்;

(xiii) ஏலதாரர் ஒருவரின், தரகரின், காப்புறுதி முகவரின் அல்லது ஏதேனும் உள்ளூர் விளைபொருளின் தரகு முகவரின் சேவைகள் ;

(xiv) உள் நோக்கிவரும் பயணங்கள் தொடர்பில் பிரயாண முகவர் ஒருவரின் சேவைகள், அத்தகைய ஆள் இலங்கை சுற்றுலாப் பயண அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவு செய்யப்பட்டிருப்பாராயின் ;

(xv) முற்றிலும் இலங்கைக்கு வெளியே பயன்படுத்தப்படுவதற்கு அத்தகைய ஆளினால் ஆக்கப்பட்டதும் அதற்கென வங்கியொன்றின் ஊடாக வெளிநாட்டு நாணயத்தில் பெறப்படுகின்றதுமான மென்பொருள் தொடர்பில் கணனி மென்பொருள் ஆக்குநர் ஒருவரின் சேவைகள்;

(xvi) வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவுக்காக இலங்கையிலுள்ள ஆளொருவரால் இலங்கைக்கு வெளியேயுள்ள ஆட்களுக்கு பண்டங்களின் விற்பனையை அல்லது சேவைகள் வழங்கப்படுவதனை இயலச்செய்யும் அல்லது அதற்கு வசதியளிக்கும் சேவைகளாயிருக்கும் அத்தகைய சேவைகளை பிரத்தியேகமாக தொழில் முயற்சியொன்றினால் வாடிக்கையாளரின் விவரக் கூற்றுக்கமைய உருவாக்கப்பட்ட பயன்படுத்தி இணையத்தின்மீது வழங்கப்படும் சேவைகள்;

(xvii) வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவுக்காக இலங்கைக்கு வெளியே இனம் காணப்பட்ட ஓர் அல்லது அதற்கு மேற்பட்ட வாடிக்கையாளர்களுக்குப் பிரத்தியேகமாக அத்தகைய சேவைகளை வழங்குவதற்கு தொழில் முயற்சியொன்றினால் இணையத்தின் அல்லது தொலைபேசியின்மீது வாடிக்கை யாளர் ஆதார சேவைகள் ;

(xviii) ஆயுள் காப்புறுதித் தொழில்;

(xix) முக்கியமாக திரையரங்குகளில் திரையிடப்படுவதற்கான எவையேனும் திரைப்படவியல் திரைப்படங்களின் விநியோகம், தயாரிப்பு அல்லது வழங்கல்;

(xx) திரையரங்குகளில் திரைப்படங்களைத் திரையிடல் ;

(xxi) ஐக்கிய நாடுகளின் தாபனத்திற்கு அல்லது அத்தகைய தாபனத்தின் ஏதேனும் தனித்துவமான முகவராண்மைக்கு அல்லது ஏதேனும் வெளிநாட்டு அரசாங்கத்தின் இராசதந்திரத் தூதரகத்துக்கு அல்லது அத்தகைய தூதரகத்தின் தூதரகப் பணியாட்டொகுதியின் எவரேனும் உறுப்பினருக்கு அல்லது இராசதந்திர தூதுவரின் அந்தஸ்திலிருப்பதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சரின் விதப்புரையுடன் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆளுக்கு வழங்கப்படும் ஏதேனும் சேவை; அத்துடன்

(xxii) அந்நியச்செலாவணியில் கொடுப்பனவுக்கென இலங்கைக்கு வெளியே எவரேனும் ஆளுக்கு அல்லது பங்குடைமைக்கு இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே அளிக்கப்பட்ட ஏதேனும் சேவை, அத்தகைய அந்நியச்செலாவணி வங்கியொன்றினூடாக இலங்கைக்கு பணவனுப்புதல் செய்யப்பட்டிருப்பின்.

## 2009ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம்

[2009ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

## 2002ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, நிதிச் சட்டத்தையும், 2004ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, நிதிச் சட்டத்தையும் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச் சட்டம் 2009ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

பாகம் I

### 2002ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, நிதிச் சட்டத்தைத்திருத்துதல்

2. (இரண்டாயிரத்து ஆறாம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான) 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் I (துறைமுக, விமானநிலைய அபிவிருத்தி அறவீடு), அதன் 2 ஆம் பிரிவில் அப்பிரிவுக்கான முதலாவது காப்புவாசகத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

"ஆயின், மேலே குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் பொருளின் விலை, காப்புறுதி மற்றும் கேழ்வுப் பெறுமதி தொடர்பில்,-

(அ) 2004, நவெம்பர் மாதம் 19 ஆந் தேதியன்று தொடங்கி 2005, திசெம்பர் 31 ஆந் தேதியன்று முடிவடையும் காலப்பகுதிக்கு 1.5 சதவீதத்திலான அறவீடொன்றும் ,-

(ஆ) 2006, சனவரி 1 ஆந் தேதியன்று தொடங்கி 2006, திசெம்பர் 31 ஆந் தேதியன்று முடிவடையும் காலப்பகுதிக்கு 2.5 சதவீதத்திலான அறவீடொன்றும் ;

(இ) 2008, சனவரி 1 ஆந் தேதியன்று தொடங்கி 2008, திசெம்பர் 31 ஆந் தேதியன்று முடிவடையும் காலப்பகுதிக்கு 3.0 சதவீதத்திலான அறவீடொன்றும் ; அத்துடன்

(ஈ) 2009, சனவரி 1 ஆந் தேதியன்று தொடங்குகின்ற காலப்பகுதிக்கு 5.0 சதவீதத்திலான அறவீடொன்றும்,

விதிப்பனவு செய்யப்படுதலும் அறவிடப்படுதலும் வேண்டும்.''.

3. இப்பாகத்தின் ஏற்பாடுகள், எல்லா நோக்கங்களுக்காகவும், 2009, சனவரி 1 ஆந் தேதியன்று நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

4. சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி.-

(அ) 2002, மே 1 ஆந் தேதியன்று தொடங்கி 2002, யூலை 8 ஆந் தேதியன்று முடிவடையும் அத்துடன்

(ஆ) 2009, சனவரி 1 ஆந் தேதியன்று தொடங்கி இச்சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவடையும்,

காலப்பகுதியின்போது, பொருளொன்றை இறக்குமதி செய்கின்ற ஆளொருவரிடமிருந்து, அத்தகைய பொருளின் விலை, காப்புறுதி மற்றும் கேழ்வுப் பெறுமதியின்மீது முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்படுகின்றவாறான தொகைகளுக்குச் சமமான தொகையொன்றைச் சேகரிக்குமிடத்து, அத்தகைய சேகரிப்பு, எல்லா நோக்கங்களுக்காகவும், செல்லுபடியான முறையில் செய்யப்பட்டுள்ளதாகவும், செய்யப்படுகின்றதாகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு, அத்தகைய சேகரிப்புத் தொடர்பில், எல்லாக் குடியியல் அல்லது குற்றவியல் வழக்குகளுக்கெதிராகவும் இத்தால் நட்டோத்தரவாதமளிக்கவும்படுகின்றது.

## பாகம் II

### 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தைத் திருத்துதல்

5. இரண்டாயிரத்து எட்டாம் ஆண்டின் 7 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான (இதனகத்துப் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் II (செலூலர் செல்லிடத் தொலைபேசிச் சந்தாதாரர் அறவீடு சுமத்தல்), ''செல்லிட அல்லது கம்பித் தொடர்பற்ற நிலத் தொலைபேசி'' அல்லது ''செலூலர் செல்லிடத் தொலைபேசி'' என்னும் சொற்கள் அப்பாகத்தில் காணப்படும் இடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக ''தொலைபேசி'' என்னும் சொல்லை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு, ''பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.'' என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

> ''பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்:
>
> ஆயின், அத்தகைய பெறுமதி, அத்தகைய தொலைபேசியைப் பயன்படுத்துபவருக்கு மூன்றாம் திறத்தவரொருவரினால் வழங்கப்பட்ட சேவைக்கான பிரதிபயனாக அத்தகைய தொலைபேசியைப் பயன்படுத்துபவரிடமிருந்து தொலைபேசி இயக்குநரொருவரினால் சேகரிக்கப்பட்ட தொகையை உள்ளடக்குதலாகாது.
>
> ''தொலைபேசி இயக்குநர்'' என்பது, ஒரு செல்லிட, அல்லது பொருத்தப்பட்ட கம்பித்தொடர்பற்ற, அல்லது பொருத்தப்பட்ட கம்பியுடனான தொலைபேசியின் இயக்குநர் என்று பொருளாகும்.''.

7. இச்சட்டத்தினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் II ஆம் பாகத்துக்கும் 14 ஆம் பிரிவுக்கும் செய்யப்பட்ட திருத்தங்கள், எல்லா நோக்கங்களுக்காகவும், 2009, சனவரி 15 ஆந் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

8. இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டு, சனவரி 15 ஆந் தேதியிலிருந்து தொடங்கி, இச்சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவடையும் காலப்பகுதியின்போது, எவரேனும் பயன்படுத்துபவரிடமிருந்து எவரேனும் உரிமம்பெற்ற செல்லிடத் தொலைபேசி இயக்குநரினால் விதிப்பனவு செய்யப்பட்டுச் சேகரிக்கப்பட்ட அறவீட்டுத்தொகை, அவ்வாறு செல்லுபடியான முறையில் விதிப்பனவு செய்யப்பட்டு அறவிடப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய இயக்குநருக்கு, அத்தகைய அறவீடு தொடர்பில் ஏதேனும் குடியியல் அல்லது குற்றவியல் வழக்குக்கெதிராக இத்தால் நட்டோத்தரவாதமளிக்கவும் படுகின்றது.

9. இச்சட்டத்தின் சிங்கள தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2009ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

[2009ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

### 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 5 ஆம் பிரிவானது, அதன் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (iii) ஆம் உட்பந்தியில் "ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அத்தகைய பொருளின் இறக்குமதி தொடர்பில் செலுத்தப்படற்பாலதான எல்லா வரிகளினதும் ஆய வரிகளினதும் அறவீடுகளினதும் முழுத்தொகைக்குச் சமமான தொகையொன்று" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சுங்க வரியினதும் மிகைக்கட்டணத்தினதும் ஆய வரிகளினதும் கப்பல்துறை மற்றும் விமானத்துறை அபிவிருத்தி அறவீடுகளினதும் சேர்பெறுமதி வரியினதும் முழுத்தொகைக்குச் சமமான தொகையொன்று" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

3. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2009ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, சேர் பெறுமதிவரி (திருத்தச்) சட்டம்

[2009ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

### 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (iii) ஆம் உட்பந்தியில், "2005, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் வரிவிதிக்கப்படற்பாலதான ஏதேனும் காலப்பகுதிக்கும்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2005, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால் 2009, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்கும் வரிவிதிக்கப்படற்பாலதான ஏதேனும் காலப்பகுதிக்கும்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்·

(ஆ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (எ) ஆம் உட்பந்தியில் "(v) 2005, சனவரி 1 ஆம் தேதியன்று" என்னும் சொற்களிலிருந்தும் எண்களிலிருந்தும் தொடங்கி "(இதில் வரிப்பின்னம் 3/23 ஆகும்." என்பது வரையிலான எல்லாச் சொற்களையும் எண்களையும் நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(v) (i) 2005 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கு -

(அ) சைபர் வீதப்படி வரிவிதிக்கப்படற்பாலதான பண்டங்கள் அல்லது சேவைகள் ; அத்துடன்

(ஆ) இச்சட்டத்திற்கான நான்காம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள பண்டங்கள் அல்லது சேவைகள்,

தொடர்பில்தவிர, வழங்கப்பட்ட அத்தகைய பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது இறக்குமதி செய்யப்பட்ட அத்தகைய பண்டங்களின் பெறுமதியின் மீது பதினைந்து சதவீதப்படி (நியம வீதம்) (இதில் வரிப்பின்னம் 3/23 ஆகும்)

(ii) 2009 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கு -

(அ) சைபர் வீதப்படி வரிவிதிக்கப்படற்பாலதான பண்டங்கள் அல்லது சேவைகள்; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின் நான்காம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பண்டங்கள் அல்லது சேவைகள்,

தொடர்பில் தவிர, அத்தகைய பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்களின் பெறுமதியின்மீது பன்னிரெண்டு சதவீதப்படி (நியம வீதம்) (இதில் வரிப்பின்னம் 3/28 ஆகும்)".

(இ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருதனை இடுவதன் மூலமும்:-

"(ஈ) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சுக்கான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் அங்கீகாரத்துடன் -

(i) இலங்கையில் உற்பத்திசெய்யப்பட்ட எவையேனும் பண்டங்களின் வழங்கலின் மீதும், ஏற்றுமதியாளர்களாக ஏற்றுமதி அபிவிருத்திச் சபையுடன் பதிவுசெய்யப்பட்டுள்ள அத்தகைய உற்பத்தியாளர்களினால் இவ்வுட் பிரிவின் (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட பண்டங்கள் தவிர்ந்த பண்டங்களை உற்பத்தி செய்யும் நோக்கத்துக்காகப் பயன்படுத்துவதற்கென அத்தகைய வழங்குநரினால் எவரேனும் உற்பத்தியாளருக்குச் செய்யப்படும் வழங்கலின்மீதும்; அல்லது

(ii) இந்நோக்கத்துக்காக அடையாளங் காணப்பட்ட சேவைகளின் வழங்கலொன்றாக 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அத்தகைய வழங்குநர்களினால் வழங்கப்பட்ட சேவையொன்றாகவுள்ளதும், ஏற்றுமதியாளராக ஏற்றுமதி அபிவிருத்திச் சபையுடன் பதிவு செய்யப்பட்டுள்ளவரான ஏற்றுமதிக்காகப் பண்டங்களின் அத்தகைய உற்பத்தியாளரினால் உற்பத்திசெய்யப்பட்ட எவையேனும் பண்டங்களின் தரம், இயல்பு அல்லது பெறுமதி என்பவற்றிலான சீராக்கத்தை விளைவிக்கின்றதும், எவரேனும் உற்பத்தியாளருக்கு வழங்கப்படுவதுமான ஏதேனும் சேவை அத்தகைய வழங்குநர்களினால் வழங்கப்படுதலின் மீதும்,

அத்தகைய உற்பத்தியாளர்களின் அல்லது சேவை வழங்நர்களின் செயற்பாடுகள், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சுக்கான அமைச்சரின் அங்கீகாரத்துடன் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் கண்காணிக்கப்பட்டு, அத்தகைய செய்துமுடிக்கப்பட்ட உற்பத்திப் பொருட்கள், வழங்கல்களைப் பெற்றவரினால் உண்மையில் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளனவென்று, ஆணையாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு ஆணையாளர் தலைமையதிபதியினால் விதிக்கப்பட்டவாறு காலாண்டு அடிப்படையில் அத்தகைய பண்டங்களின் கையுதிர்ப்பின்மீதான கணக்கிணக்கத்தை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை கொடுத்துதவும் வரையும் ".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "10. (1) இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டு" என்னும் சொற்களிலிருந்தும் எண்களிலிருந்தும் "தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்:" என்னும் சொற்கள் வரையிலான எல்லாச் சொற்களையும் எண்களையும் நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"10. (1) (i) 2002, ஓகத்து 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால் 2009, சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னர் இலங்கையில் ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாட்டைக் கொண்டுநடாத்துகின்ற அல்லது நிறைவேற்றுகின்ற ஆள் ஒவ்வொருவரும் -

(அ) விடயத்திற்கேற்ப, ஏதேனும் வரி விதிக்கப்படற்பாலதான ஒரு மாத அல்லது மூன்று மாத காலப்பகுதியின் முடிவில் அந்த வரிவிதிக் கப்படற்பாலதான விடயத்துக்கேற்ப, ஒரு மாத அல்லது மூன்று மாத காலப்பகுதியில் இலங்கையில் செய்யப்பட்ட அவரது பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவைகளினதும் வரிவிதிக்கப்படற்பாலதான வழங்கல்களின் மொத்தப் பெறுமதி ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சியிருப்பின் அல்லது

(ஆ) அப்போது முடிவடையும் பன்னிரெண்டுமாத காலப்பகுதியில் இலங்கையில் செய்யப்பட்ட அவரது வரிவிதிக்கப்படற்பாலதான பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவைகளினதும் வரி விதிக்கப்படற்பாலதான வழங்கலின் மொத்தப் பெறுமதி பதினெட்டு இலட்சம் ரூபாவை விஞ்சியிருப்பின் அல்லது

(இ) விடயத்திற்கேற்ப, அடுத்துவரும் ஒரு மாத அல்லது மூன்று மாத வரி விதிக்கப்படற்பாலதான காலப் பகுதியொன்றில் அவரது வரி விதிக்கப்படற்பாலதான பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவை களினதும் வரிவிதிக்கப்படற்பாலதான வழங்கல்களின் மொத்தப் பெறுமதி ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சக்கூடிய சாத்தியத்தை அல்லது அடுத்துவரும் பன்னிரெண்டு மாத காலப்பகுதியில் பதினெட்டு இலட்சம் ரூபாவை விஞ்சக் கூடிய சாத்தியத்தைக் கொண்டிருக்குமென நம்புவதற்கு எந்நேரத்திலும் நியாயமான ஏதுக்கள் இருப்பின்,

இச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்படத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.".

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(ii) 2009, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர், இலங்கையில் ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாட்டைக் கொண்டுநடாத்துகின்ற அல்லது நிறைவேற்றுகின்ற ஆள் ஒவ்வொருவரும் -

(அ) விடயத்திற்கேற்ப, ஏதேனும் வரி விதிக்கப்படற்பாலதான ஒரு மாத அல்லது மூன்று மாத காலப்பகுதியின் முடிவில் அந்த வரி விதிக்கப்படற்பாலதான விடயத்துக்கேற்ப, ஒரு மாத அல்லது மூன்ற மாத காலப்பகுதியில் இலங்கையில் செய்யப்பட்ட அவரது பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவை களினதும் வரிவிதிக்கப்படற்பாலதான வழங்கல்களின் மொத்தப் பெறுமதி ஆறு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சியிருப்பின்; அல்லது

(ஆ) அப்போது முடிவடையும் பன்னிரெண்டு மாத காலப்பகுதியில் இலங்கையில் செய்யப்பட்ட அவரது வரி விதிக்கப்படற்பாலதான பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவைகளினதும் வரி விதிக்கப்படற்பாலதான வழங்கலின் மொத்தப் பெறுமதி இரண்டு மில்லியன் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சியிருப்பின்; அல்லது

(இ) விடயத்திற்கேற்ப, அடுத்துவரும் ஒரு மாத அல்லது மூன்று மாத வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதி யொன்றில் அவரது வரி விதிக்கப்படற்பாலதான பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங் களினதும் சேவைகளினதும் வரி விதிக்கப்படற்பாலதான வழங்கல்களின் மொத்தப் பெறுமதி ஆறு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சக்கூடிய சாத்தியத்தை அல்லது அடுத்துவரும் பன்னிரெண்டு மாத காலப்பகுதியில் இரண்டு மில்லியன் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சக்கூடிய சாத்தியத்தைக் கொண்டிருக்குமென நம்புவதற்கு எந்நேரத்திலும் நியாயமான ஏதுக்கள் இருப்பின்,

இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.".

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவுக்கான நான்காம் காப்பு வாசகத்தில், "பதினைந்து சதவீதத்துக்கு மட்டுப்படுத்தப்படுதல் வேண்டும்."என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பன்னிரெண்டு சதவீதத்துக்கு மட்டுப்படுத்தப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்˙

(2) ஐந்தாம் உட்பிரிவுக்கான இரண்டாம் காப்புவாசகத்தின் (ஆ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியில், "பதிவு செய்யப்பட்ட ஆளினால் வங்கி உத்தரவாதமொன்று அல்லது காப்புறுதி முறியொன்று" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆணையாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான பெறுமதிக்காகப் பதிவுசெய்யப்பட்ட ஆளினால் வங்கி உத்தரவாதமொன்று அல்லது காப்புறுதி முறியொன்று" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்˙

(3) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் (iv) ஆம் உட்பந்தியில், "(iv) விடயத்துக்கேற்ப, (iii) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பணப்பட்டியலின் அல்லது சுங்க வெளிப்படுத்துகையின் மீதான உள்ளீட்டுவரி," என்னும் சொற்களிலிருந்து "கழிக்கப்படவில்லையாயின் :" என்னும் சொல்வரையிலான எல்லாச் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(iv) (அ) (iii) ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பணப்பட்டியலின் மீதான உள்ளீட்டு வரி, ஏதேனும் வரிவிதிக் கப்படற்பாலதான காலப்பகுதிக்கான விபரத்திரட்டைப் பன்னிரெண்டு மாத காலப்பகுதியினுள் கொடுத்துதவுவதன்மூலம், அத்தகைய வரிப் பணப்பட்டியலின் தேதியிலிருந்து சொல்லப்பட்ட பன்னிரெண்டு மாதங்கள் முடிவுறுவதன் மேல் அல்லது அதன் முன்னர் முடிவடைகின்ற அந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக வெளியீட்டு வரியிலிருந்து கழிக்கப்படவில்லையாயின்; அல்லது

(ஆ) (iii) ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் சுங்க வெளிப்படுத்துகையின் மீதான உள்ளீட்டு வரி, ஏதேனும் வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கான விபரத்திரட்டை இருபத்திநான்கு மாதகாலப்பகுதியினுள் கொடுத்துதவுவதன்மூலம், அத்தகைய சுங்க வெளிப்படுத்துகையின் தேதியிலிருந்து சொல்லப்பட்ட இருபத்திநான்கு மாதங்கள் முடிவுறுவதன் மேல் அல்லது அதன் முன்னர் முடிவடைகின்ற அந்த வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக வெளியீட்டு வரியிலிருந்து கழிக்கப்பட்டவில்லையாயின்; ".

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25அ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ii) ஆம் பந்தியில், "எவரேனும் ஆளினால்; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "எவரேனும் ஆளினால்'" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(2) அவ்வுட்பிரிவின் (iii) ஆம் பந்தியில், "2008 சனவரி 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர், 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒரு கூட்டுறவுச் சங்கம் தவிர்ந்த வேறு எவரேனும் ஆளினால்," என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2008 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால் 2009 சனவரி 1 ஆம் தேதிக்குமுன்னர், 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒரு கூட்டுறவுச் சங்கம் தவிர்ந்த வேறு எவரேனும் ஆளினால்; அத்துடன்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(3) அவ்வுட்பிரிவின் (iii) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலமும் :-

"(iv) 2009 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற, 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டவொரு கூட்டுறவுச் சங்கம் தவிர்ந்த அல்லது 1951 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, லோகோர் சீமாட்டிக் கடன் நிதியம் தவிர்ந்த எவரேனும் ஆளினால்,".

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஐ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "அத்தகைய ஆளின் அல்லது பங்குடைமையின் கூட்டுமொத்த மொத்தவிற்பனை வரவு எந்தக் காலாண்டில் ஆண்டொன்றுக்கு இரண்டு மில்லியன் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சுகின்றதோ, அந்தக் காலாண்டின் முடிவுவரை, இவற்றுள் எது முதலில் நிகழ்கின்றதோ, அதுவரை, அத்தகைய பதிவு செல்லுபடியுடையதாதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

"(i) அத்தகைய ஆளின் அல்லது பங்குடைமையின் கூட்டுமொத்த மொத்தவிற்பனை வரவு -

(அ) 2009 சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதிக்கு எந்தக் காலாண்டில் ஆண்டொன்றுக்கு இரண்டு மில்லியன் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சுகின்றதோ ;

(ஆ) 2009 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதிக்கு எந்தக் காலாண்டில் ஆண்டொன்றுக்கு மூன்று மில்லியன் ரூபாவை விஞ்சுகின்றதோ;

இவற்றுள் எது முதலில் நிகழ்கின்றதோ அதுவரை, அத்தகைய பதிவு செல்லுபடியுடையதாதல் வேண்டும்.";

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், அதன் (i) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

"(i) அவரால் அல்லது அதனால் கொண்டு நடாத்தப்படும் அல்லது நிறைவேற்றப்படும் ஒவ்வொரு வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாட்டிலுமிருந்தான அவரது அல்லது அதன் கூட்டுமொத்த மொத்த விற்பனை வரவு-

(அ) 2009 சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதிக்கு ஆண்டொன்றுக்கு இரண்டு மில்லியன் ஐந்து இலட்சம் ரூபாவை அல்லது ஒரு காலாண்டுக்கு ஆறு இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாததாகவுள்ளதும்; அத்துடன்

(ஆ) 2009 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதிக்கு ஆண்டொன்றுக்கு மூன்று மில்லியன் ரூபாவை அல்லது ஒரு காலாண்டுக்கு ஏழு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாததாகவுள்ளதும்,

ஆன எவரேனுமாளுக்கு அல்லது ஏதேனும் பங்குடைமைக்கு ஏற்புடையனவாதல் வேண்டும் அத்துடன்".

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

"(1அ) முப்பத்திநான்காம் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஆணையாளர் தலைமையதிபதி, அவருக்குச் செய்யப்பட்ட ஏதேனும் செல்லுபடியான மேன்முறையீட்டை மீளாய்வுச் சபைக்கு ஆற்றுப்படுத்தலாமென்பதுடன், மீளாய்வுச் சபையானது அத்தகைய மேன்முறையீட்டைக் கேட்டுத் தீர்மானித்தலும் வேண்டும். 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 169 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், அவ்வாறு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டைக் கேட்டுத் தீர்மானிப்பதற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.".

8. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணை அதன் II ஆம் பாகத்தில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பாகத்தின் (அ) என்னும் பந்தியில் :-

(அ) விடயம் (ஔ)இல் "2008 திசெம்பர் 31 ஆம் தேதிக்குப் பிந்தாமல்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2010 திசெம்பர் 31 ஆம் தேதிக்குப் பிந்தாமல்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்

(ஆ) (ஔ) ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன்மூலமும் :-

"(xvi) சுங்க நோக்கங்களுக்காகக் குறித்துரைக்கப்படும் இசைவாக்கப்பட்ட உணவுப் பொருள் விவரண இலக்கங்களின்கீழ் அடையாளங்காணப்பட்ட சூரிய சக்தி வலுவைப் பிறப்பிப்பதற்கான சூரிய பொட்டிப்பு கலங்கள் அல்லது வீட்டு சூரிய சக்தி முறைமை துணைப் பொருட்களும் (2009.01.01 ஆம் தேதியிலிருந்து பயனுறுமாறு);

(xvii) சுங்க நோக்கங்களுக்காகக் குறித்துரைக்கப்படும் இசைவாக்கப்பட்ட உணவுப் பொருள் விவரண இலக்கங்களின்கீழ் அடையாளங்காணப்பட்ட உயர் தொழினுட்ப மருத்துவச் சாதனங்கள் அல்லது சீட்டு வழங்கும் எந்திரத் தொகுதியை உற்பத்தி செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் எந்திரத் தொகுதி.

(2) அப்பாகத்தின் (ஆ) என்னும் பந்தியில் :-

(அ) (xxvi) ஆம் விடயத்தில், "(2008.01.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்); அத்துடன்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "(2008.01.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்)" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்

(ஆ) (xxvii) ஆம் விடயத்தில், "(2008.01.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்); என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக"(2008.01.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்)" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்

(இ) (xxvii) ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயங்களைச் சேர்ப்பதன்மூலமும் :-

"(xxviii) தேயிலைத் தொழிலுக்காகப் பயன்படுத்தப்படுவதும், தேயிலை எந்திரத் தொகுதியொன்றாக 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைத் தேயிலைச் சபையினால் அடையாளங் காணப்பட்டதும், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டதுமான எந்திரத்தொகுதி (2008.10.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்)'

(xxix) அறுவை மருத்துவத்துக்காகப் பயன்படுத்தப்படுவதும், உள்நாட்டில் உற்பத்திசெய்யப்பட்டதுமான அறுவை மருத்துவஞ்சார் மென் துணி வலை (2009.01.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்).". அத்துடன்

(xxx) உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட நகைகள்.

(3) அப்பாகத்தின் (இ) என்னும் பந்தியில் :-

(அ) (xxiii) ஆம் விடயத்தில், "அல்லது குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்துக்கான" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அல்லது குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்துக்கான" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்'

(ஆ) (xxiii) ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலமும் :-

"(xxiv) பயங்கரவாதச் செயற்பாடுகள் காரணமாக அழிக்கப்பட்ட ஏதேனும் பஸ்வண்டியை மாற்றீடு செய்வதற்கு அதன் சொந்தக்காரரினால், தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுவின் அல்லது ஏதேனும் மாகாண

வீதிப் பயணிப் போக்குவரத்து அதிகார சபையினது அங்கீகாரத்துடனான ஏதேனும் பஸ்வண்டி (2008.07.09 ஆம் தேதியிலிருந்து பயனுறும்)'

(xxv) கிராமியக் கைத்தொழில்கள் மற்றும் சுய ஊழிய மேம்படுத்துகை அமைச்சின் அங்கீகாரத்துடன் தேசியக் கைப்பணிப் பேரவையினால் பித்தளைப்பொருட்களை உற்பத்தி செய்வதற்கான பித்தளைத் தகடுகள், பித்தளை வார்ப்புக் கட்டிகள், நூல், சாயங்கள், வெண்மெழுகு அல்லது அரக்கு (2009.01.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்)'

(xxvi) மின்சாரத்தைப் பிறப்பிப்பதற்காக இலங்கை மின்சாரச் சபைக்கு வழங்கப்படுவதற்கான இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் இரசாயன நப்தா (2009.01.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்)'

(xxvii) இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டவையும், அத்தகைய மருந்தாக்கங்களின் உற்பத்தியாளரினால் இறக்குமதிசெய்யப்பட்டவையும், அத்துடன் சுகாதாரக் கவனிப்பு மற்றும் போஷாக்கு அமைச்சுக்கான செயலாளரின் விதப்புரையின்மேல் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டவையுமான மருந்தாக்கங்களைப் பொதியிடுவதற்குப் புறநீங்கலாகப் பயன்படுத்துவதற்கான பொதியிடும் பொருட்கள், இலங்கையில் அத்தகைய பொதியிடும் பொருட்கள் உற்பத்திசெய்யப்படாத வரையும்.

(xxviii) தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத் தவிசாளரின் அங்கீகாரத்துடன் சுங்க நோக்கங்களுக்காக இசைவாக்கப்பட்ட உணவுப் பொருள் விவரண மற்றும் கோவையிடும் முறைமை இலக்கங்களின் கீழ் அடையாளங் காணப்படும், வெளிக்காட்டப்பட்ட அல்லது உருவிளக்கப்படுத்தப்பட்ட சினே திரைப்படங்களும், காந்த சினே ஒலிப்பதிவுக் கருவிகளும், திரைப்படம்சார் படம்பிடிக்கும் கருவிகளும், படங்காட்டு கருவிகளும், பாகங்களும் துணைப்பொருட்களும், திரைப்படம்சார் ஆய்வுகூடங்களுக்கான உபகரணங்களும் சாதனங்களும், மின்சார மின்னிழைகளும் அல்லது மின்வெளியேற்று விளக்குகளும் வில் விளக்குக் கார்பனும்.".

(4) அப்பாகத்தின் (ஊ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலமும் :-

"(எ) சமுதாயத்தினரது பங்குபற்றுகையின்மூலம் நிறைவேற்றப்படுவனவும், நாட்டைக் கட்டியெழுப்புதல், மற்றும் அரச உள்ளகக் கட்டமைப்பு அபிவிருத்தி என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்டனவும், கம நகும, மக நகும, சமுர்த்திக் கருத்திட்டங்களுக்கான நிர்மாணச் சேவைகளாகவுள்ளனவுமான சேவைகளை வழங்குதல் (2009.01.01 ஆம் தேதியிலிருந்து பயனுறுமாறு);

9. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான மூன்றாம் அட்டவணையானது, "மூன்றாம் அட்டவணை" என்ற தலையங்கத்தை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

"2009, சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக".

10. (அ) இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்திக்குச் செய்யப்பட்ட திருத்தங்கள் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக 2008, யூன் 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளனவெனக் கருதப்படுதல் வேண்டும்

(ஆ) இச்சட்டத்தின் பிரிவு 4(1), (2) மற்றும் (3) என்பவற்றினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 22ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தங்கள், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக 2009 சனவரி 1ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(இ) இச்சட்டத்தின் 7 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம், எல்லா நோக்கங்களுக்காகவும் 2009, சனவரி 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதெனக் கருதப்படுதல் வேண்டும்.".

11. இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டு சனவரி 1 ஆம் தேதியன்று தொடங்குகின்றதும், இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியின்போது இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாகச் சேர்பெறுமதி வரியைச் சேகரிக்கும் எவரேனுமாள் உரிய அதிகாரத்துடன் செயலாற்றியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சேகரிப்பானது, எல்லா நோக்கங்களுக்காகவும் செல்லுபடியானமுறையில் செய்யப்பட்டுள்ளதாகவும் செய்யப்படுகின்றதாகவும் கருதப்படுதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய ஆளுக்கு, அத்தகைய சேகரிப்புத் தொடர்பில், எல்லாக் குடியியல் அல்லது குற்றவியல் வழக்குகளுக்கெதிராகவும் இத்தால் நட்டோத்தரவாதமளிக்கப்படுகின்றது.

12. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2009ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டம்

[2009ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

**2006ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

1. இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவுக்கான காப்பு வாசகத்தை நீக்கவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் காப்புவாசகத்தை இடுவதன்மூலமும் :-

"ஆயின், எவரேனும் ஆளிடமிருந்து அல்லது பங்காண்மையிடமிருந்து அறவிடப்படற்பாலதான சேவை விதிப்பனவு எவ்விடயத்திலும் பின்வருவதனை விஞ்சுதலாகாது :-

(i) 2009, மாச்சு மாதம் 31 ஆந் தேதியன்று அல்லது அதன்முன்னர் முடிவடைகின்ற இயைபான ஏதேனும் காலாண்டுக்காகப் பதினைந்து மில்லியன் ரூபா; அத்துடன்

(ii) 2009, ஏப்பிறல் மாதம் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற இயைபான ஏதேனும் காலாண்டுக்காக முப்பது மில்லியன் ரூபா;" அத்துடன்

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் -

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்திக்கான காப்பு வாசகத்தை நீக்கிவிடுவதன்மூலமும் :-

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் உட்பந்தி (அ)வின் (ii) ஆம் விடயத்தில் "கழித்த பின்னரும்; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கழித்தபின்னரும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் :-

(இ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் உட்பந்தி (அ)வின் (iii) ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் பதிய விடயங்களைச் சேர்ப்பதன்மூலமும் :-

"(iv) உரிமம்பெற்ற ஏதேனும் வா்த்தக வங்கிக்கு அல்லது வதிவற்ற எவரேனும் ஆளுக்கு இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்டதான ஏதேனும் வெளி நாட்டு நாணயத்தில் குறிக்கப்படும் அரசினால் பிணைப்பொறுப்பளிக் கப்பட்ட முறியின் விற்பனை வரும்படிகளைக் கழித்தபின்னரும் (2008, ஒற்றோபர் 21 ஆந் தேதியிலிருந்து பயனுறும்);

(v) ஏதேனும் திறைசேரிமுறி முதலீட்டு வெளிநாட்டு ரூபா கணக்கிலிருந்து பெறப்பட்ட நிதிகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட -

(அ) (417 ஆம் அத்தியாயமான) உள்ளூர்த் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் திறைசேரி உண்டியலின்; அல்லது

(ஆ) (420 ஆம் அத்தியாயமான) பதிவுசெய்யப்பட்ட பங்குத் தொகுதிகளும் பிணையங்களும் கட்டளைச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் திறைசேரி முறியின்,

விற்பனை வரும்படிகளைக் கழித்த பின்னரும் (2008, யூன் 1 ஆந் தேதியிலிருந்து பயனுறும்) ;

(vi) 2009, சனவரி மாதம் 1 ஆந் திகதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால் 2009, திசெம்பர் 31 ஆம் திகதியன்று அல்லது அதற்குமுன்னர் பயனுறுத்தப்பட்ட ஏதேனும் பொருட்கள் அல்லது பண்டங்களின் ஏற்றுமதியிலிருந்தான பெறுகைகள்˙

(vii) உற்பத்தியாளரால் எவரேனும் ஏற்றுமதியாளருக்கு ஏற்றுமதிக்காக ஏற்றுமதியாளரினால் மேலும் செய்முறை அல்லது உற்பத்தியின்றி, 2009, சனவரி 1 ஆந் திகதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால் 2009, திசெம்பர் 31ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பயனுறுத்தப்பட்ட எவையேனும் பொருட்களின் அல்லது பண்டங்களின் வழங்கலிலிருந்தான பெறுகைகள் ;

(viii) 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைச் சுற்றுலாப் பயண அபிவிருத்தி அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட, விடயத்திற்கேற்ப, ஒரு ஹோட்டலாக, தொழிற்படுத்துநராக அல்லது முகவராக உள்ள -

(அ) ஏதேனும் ஹோட்டலின்;

(ஆ) ஏதேனும் உள்ளூர் சுற்றுலாப் பயணத் தொழிற்பாட்டின்;

(இ) எவரேனும் உள்ளூர் சுற்றுலாப் பயண முகவரின்,

ஆனால், 2009, சனவரி 1 ஆந் திகதியன்று அல்லது அதற்குப்பின்னர் 2009, திசெம்பர் 31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பயனுறுத்தப்பட்ட எவையேனும் தொழிற்பாடுகளிலிருந்தான பெறுகைகள்; அத்துடன்'';

(ஈ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்கான காப்பு வாசகத்தின் (அ) என்னும் பந்தியில் ''அத்தகைய வங்கியின் மொத்த விற்பனை வரவின் பாகமாக அமைகின்றதாகக் கருதப்படுதல் வேண்டும்' அத்துடன்''என்னும் சொற்களுக்குப் பதிலாக,

''அத்தகைய வங்கியின் மொத்த விற்பனை வரவின் பாகமாக அமைகின்றதாகக் கருதப்படுதல் வேண்டும்.

இப்பந்தியின் நோக்கங்களுக்காக -

''வங்கி'' என்பது, ஒரு நிதிநிறுவனத்தை அல்லது அடகுபிடிப்பவரை உள்ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன்

''நிதிநிறுவனம்'' என்பது, எந்த ஆளின் தொழில் அல்லது தொழிலின் பாகம், வைப்பு என்றவகையாகப் பணத்தை; அல்லது கடன்தொகுதிப்பத்திரம் அல்லது முறி என்றவடிவத்திலான அல்லது வேறேதேனும் வடிவத்திலான கடனை ஏற்றுக் கொள்ளுதலையும், மற்றும் அதன்மீது வட்டி செலுத்துதலையும் கொண்டுள்ளதோ (அத்தகைய ஏற்றுக்கொள்ளுதல் அதன் சொந்தச் சார்பில் அல்லது வேறெவரேனுமாளின் சார்பில் செய்யப்படினுஞ்சரி), கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத அந்த எவரேனுமாள் என்று பொருளாகும் ; அத்துடன்''.

3. இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினாலும் (2) ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஈ) என்னும் பந்திகளினாலும் முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம், 2009, ஏப்பிறல் 1 ஆந் தேதியிலிருந்து வலுவுக்குவருதல் வேண்டும்.

4. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2009ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க, பற்றுக்கள் வரி (திருத்தச்) சட்டம்

[2009ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

## 2002ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, பற்றுக்கள் வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பற்றுக்கள் வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2002 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பற்றுக்கள் வரிச் சட்டத்தின் 10 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவுகளைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :

''(3) (அ) ஏதேனும் வர்த்தக வங்கி, விசேட வங்கி நிதிக் கம்பெனி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி -

(i) ஆறாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் உட்பிரிவின்கீழ் ஏதேனும் நடைமுறைக் கணக்கில், அல்லது சேமிப்புக் கணக்கில் போதிய நிதியைக் கொண்டுள்ள அத்தகைய கணக்கிலிருந்து பற்றுக்கள் வரியை மீளப்பெற அல்லது அனுப்பத் தவறுமிடத்து;

(ii) விடயத்திற்கேற்ப வைப்புச் சான்றிதழொன்றை அல்லது பயணிகள் காசோலையொன்றைக் காசாக மாற்றுவதன்மீது தேறிய தொகையிலிருந்து 6 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் கழிப்பனவு செய்ய அல்லது அனுப்பத் தவறுமிடத்து;

அத்தகைய வர்த்தக வங்கி, விசேட வங்கி, நிதிக்கம்பெனி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆள் செலுத்தப்படற்பாலதான பற்றுக்கள் வரியின் முழுத்தொகைக்கும் தவணைதவறிய ஒருவர் எனக் கருதப்படுதல் வேண்டும்.

(ஆ) விடயத்திற்கேற்ப அவ்வாறு மீளப்பெறப்படாத, கழிப்பனவு செய்யப்படாத அல்லது அனுப்பப்படாத முழுத்தொகையும் அத்தகைய தொகை, ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்பட்டிருக்கவேண்டிய நாளை உடனடுத்துவரும் நாளிலிருந்து தவணைதவறுகையிலிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய தொகை அத்தகைய வர்த்தக வங்கியிடமிருந்து, விசேட வங்கியிடமிருந்து, நிதிக் கம்பெனியிடமிருந்து அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியிடமிருந்து இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் அறவிடப்படுதலும் வேண்டும்.

(4) இப்பிரிவிலுள்ள எதுவும், (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட பற்றுக்கள் வரியின்தொகையை வர்த்தக வங்கியிடமிருந்து, விசேட வங்கியிடமிருந்து அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியிடமிருந்து முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ அல்லது எந்த ஆளிடமிருந்து அத்தகைய மீளப்பெறுதல் அல்லது கழிப்பனவு செய்யப்பட்டிருக்கவேண்டுமோ அந்த ஆளிடமிருந்து முழுமையாவோ அறவிடுவதற்கு ஆணையாளர் தலைமையதிபதி பொருத்தமானதெனக் கருதும் அத்தகைய நடவடிக்கையை எடுப்பதினின்று அவரை தடைசெய்வதாக வாசித்து பொருள் கொள்ளப்படுதலாகாது.".

3. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2009ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம்

[2009ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

## 2005ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, நிதிச் சட்டத்தைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப் பின்னர் முதன்மைச் சட்டம் என எடுத்துக் காட்டப்படும்) 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டம் (நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீடு) அச்சட்டத்தின் பாகம் III என்பதன் 13 ஆம் பிரிவில் ""ஒவ்வோர் ஒப்பந்தக்காரரினாலும் அல்லது உப ஒப்பந்தக்காரரினாலும் செலுத்தப்படற்பாலதான மொத்தச் செலவின்மீது,"" என்னும் சொற்களுக்குப் பதிலாக, ""ஒவ்வொரு ஒப்பந்தக்காரருக்கும் அல்லது உப ஒப்பந்தக்காரக்கும் செலுத்தப்படற்பாலதான மொத்த ஒப்பந்தச் செலவின்மீது," என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பது டன் அது அச்சட்டவாக்கத்தின் 13அ என்னும் பிரிவு என்றாற் போன்று பயனுறுதலும் வேண்டும்.

"எவரேனும் ஆள் அல்லது பங்காண்மை நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீட்டைக் கழிப்பனவு செய்தல்

13அ. (1) எவரேனும் ஆள் அல்லது பங்காண்மை எவரேனும் விடயத்திற்கேற்ப ஒப்பந்தக்காரரால் அல்லது உப ஒப்பந்தக்காரரால் 2005 சனவரி 1 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் செய்து கொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையின்கீழ் இலங்கையில் வலுவுக்கிடப்பட்ட ஏதேனும் நிர்மாண ஒப்பந்தத்தின்கீழ் அல்லது உப ஒப்பந்தத்தின் பெறுமானத்தின் தொகையினதான ஏதேனும் கொடுப்பனவை அத்தகைய நிர்மாண ஒப்பந்தகாரருக்கு அல்லது உப ஒப்பந்தக்காரருக்கு 2009, ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் செய்யுமிடத்து அத்தகைய ஆள் அல்லது பங்காண்மை அத்தகைய கொடுப்பனவிலிருந்து நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீட்டை இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதப்படி கழிப்பனவு செய்யுமாறும் அத்துடன் அத்தகைய ஒப்பந்தக்காரருக்கு அல்லது உப ஒப்பந்தக்காரருக்கு பணிப்பாளர் தலைமையதிபதியால் குறித்துரைக்கப்பட்டவாறான வடிவத்தில் அத்தகைய கழிப்பனவின் விவரங்களைத் தரும் கூற்றொன்றை வழங்குமாறும் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) வருமானவரிக் கழிப்பனவைப் பின்பற்றும் வங்கிகளினதும் நிதி நிறுவனங்களினதும் கடமைகள், வருமானவரிக் கழிப்பனவின் தவறுகை, வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள்மீது மதிப்பீடுகளை வழங்குதல், மேன்முறையீடுகள் அத்துடன் தவணை தவறுகைக்கான தண்டப்பணங்கள் என்பன தொடர்பில் 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் பிரிவுகள் 140, 142, 143, 144 அத்துடன் 145 என்பவற்றின் ஏற்பாடுகள், நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீட்டின் கழிப்பனவுகளைப் பின்பற்றும், நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீட்டின் கழிப்பனவில்; தவறுகை, அத்தகைய ஆட்களின்மீது அல்லது பங்காண்மைகளின்மீது மதிப்பீடுகளை வழங்குதல்,

மேன்முறையீடுகளும் தவணை தவறுகைக்கான தண்டப்பணங்களும் என்பன தொடா்பிலான நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீடு தொடா்பில் அத்தகைய ஆட்களினதும் பங்காண்மைகளினதும் கடமைகளுக்கு ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) மேற்கூறப்பட்ட உட்பிரிவுகளின்கீழ் நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீடாகக் கழிப்பனவு செய்யப்பட்ட தொகை அதனை கழிப்பனவு செய்யும் ஆளினால் அல்லது பங்காண்மையினால் அத்தகைய கழிப்பனவு செய்யப்பட்ட மாதத்தை உடனடுத்துவரும் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னா் ஆணையாளா் தலைமையதிபதியால் குறித்துரைக்கப்பட்டவாறான வடிவத்தில் அத்தகைய கழப்பனவுகளின் விவரத்தைத் தரும் கூற்றொன்றுடன் சேர்த்து ஆணையாளா் தலைமையதிபதிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(4) கழிப்பனவு செய்யப்பட்டு ஆணையாளா் தலைமையதிபதிக்கு அனுப்பப்பட்ட அத்தகைய கழிப்பனவு தொடா்பிலான சான்றிதழ் முன்வைக்கப்படுவதன்மீது நிர்மாண ஒப்பந்தக்காரா் அல்லது உப ஒப்பந்தக்காரா் 13 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய ஒப்பந்தக்காரரால் அல்லது உப ஒப்பந்தக்காரரால் செலுத்தப்படற்பாலதான நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீட்டின் தொகையிலிருந்து கொடுப்பனவு செய்யும் ஆளினால் அல்லது பங்காண்மையால் அத்தகைய கொடுப்பனவைச் செய்யும் நேரத்தில் நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீடாகச் செய்யப்பட்ட ஏதேனும் கழிப்பனவுத் தொகையைக் கழிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு "பதின்மூன்றாம் பிரிவின்கீழ் செலுத்தப்படற்பாலதான நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீடு நிர்மாண ஒப்பந்தக்காரா்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பதின்மூன்றாம் பிரிவின்கீழ் எவரேனும் ஒப்பந்தக்காரரால் அல்லது உப ஒப்பந்தக்காரரால் செலுத்தப்படற்பாலதான நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீட்டின் ஏதேனும் மிகுதி 13அ என்னும் பிரிவின்கீழ் செலுத்துநரால் கழிப்பனவு செய்யப்பட்ட அத்தகைய அறவீட்டைக் கழிப்பனவு செய்த பின்னா் விடயத்திற்கேற்ப அத்தகைய நிர்மாண ஒப்பந்தக்காரரால் அல்லது உப ஒப்பந்தக்கரரால்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு, "ஒப்பந்தப் பெறுமதி " என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கஞ் செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :

"ஒப்பந்தப் பெறுமதி" என்பது, ஏற்றுக்கொள்ளற் கடிதங்களிற் கூறப்பட்ட அத்துடன் ஒப்பந்தங்களின் ஏற்பாடுகளுக்கிணங்க அதன்பின்னா் சீராக்கப்பட்ட தொகை அல்லது தொகைகள் என்று பொருளாகும். சொல்லப்பட்ட ஒப்பந்தப் பெறுமதி ஏதேனும் நிர்மாணப் பணியை மேற்கொள்ளுதல் தொடா்பில் செய்துகொள்ளப்பட்ட தனிப்பட்ட ஒப்பந்தங்களின் அல்லது பல்வேறு ஒப்பந்தங்களின் மொத்தத் தொகையாதல் வேண்டும் என்பதுடன் உப ஒப்பந்தப் பெறுமதிகளையும் அத்தகைய வேலைகளை மேற்கொள்ளுவதில் உறப்படக்கூடிய அத்தகைய வேறு நிர்மாண ஆகுசெலவுகளையும் உள்ளடக்குதல் வேண்டும். ஆனால் 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சோ்பெறுமதி வரிச் சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் சோ்பெறுமதி வரியை உள்ளடக்குதல் ஆகாது அத்துடன்".

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாம் அட்டவணை அதன் 4 ஆம், 5 ஆம், 6 ஆம் இனங்களுக்குப் பதிலாகப் பின்வரும் புதிய இனத்தை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :

"4. (அ) 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம் (அத்தியாயங்கள் XV, XVI அத்துடன் XVII மற்றும் 33 ஆம், 61 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளைத் தவிர) அத்தகைய சட்டம் 2005, ஏப்பிறல் 1 ஆம் தேதி தொடங்கி 2006, மாச்சு இறுதி வரையிலான காலப்பகுதிக்கு ஏற்புடையதாகும் அளவுக்கு;

(ஆ) 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டர சிறைச் சட்டம் (அத்தியாயங்கள் XVI, XVII, XVIII அத்துடன் XXI மற்றும் 36 ஆம், 65 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளைத் தவிர) அத்தகைய சட்டம் 2006, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்கி 2008, மாச்சு இறுதி வரையிலான காலப்பகுதிக்கு ஏற்புடையதாகும் அளவுக்கு; அத்துடன்

(இ) 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம் (அத்தியாயங்கள் XVI, XVII, XVIII அத்துடன் XXI மற்றும் 36 ஆம், 65 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளைத் தவிர) அத்தகைய சட்டம் ஏதேனும் கம்பெனிக்கும் 2008, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னா் தொடங்கும் ஏதேனும் காலப்பகுதிக்கும் ஏற்புடையதாகும் அளவுக்கு .".

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் இரண்டாவது அட்டவணை, இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அதன் 2 ஆம் விடயத்தில் "ஐம்பது மில்லியன் ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐம்பது மில்லியன் ரூபாவுக்குக் குறைவான" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) அதன் 3 ஆம் விடயத்தில் "நூற்றியைம்பது மில்லியன் ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நூற்றியைம்பது மில்லியன் ரூபாவுக்குக் குறைவான" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

8. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2009ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

[2009ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

### 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இரண்டாயிரத்து எட்டாம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" குறிப்பீடுசெய்யப்படும்) 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவு அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் அப்பந்தியின் (lix) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(lx) 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கை தொலைத்தொடர்புச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு"

3. இரண்டாயிரத்து எட்டாம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அதன் (ஈ) என்னும் பந்தியில் "இலங்கையில் 2008, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்குமுன்னா் எழுகின்ற வேதனாதிகளும்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "இலங்கையில் எழுகின்ற வேதனாதிகளும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "எது முந்தியதோ அத்தேதிவரை, ஆனால் 2008, ஏப்பிறல் 1 ஆம் திகதிக் குப்பிந்தாமல்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "எது முந்தியதோ அத்தேதிவரை" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

4. இரண்டாயிரத்து எட்டாம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில் "எவரேனும் ஆளுக்குத் திரளும் வட்டியும்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2009, மாச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னா் எவரேனும் ஆளுக்குத் திரளும் வட்டியும்;" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (க) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன்மூலமும் ;

"(ங) இச்சட்டத்தின் 132 ஆம் பிரிவில் வரை விலக்கணம் கூறப்பட்டவாறு ஏதேனும் அரசாங்க நிறுவனத்தின் ஊழியா் எவருக்கும் லோகோா் சீமாட்டி கடன் நிதியத்தால் வழங்கப்பட்ட ஏதேனும் கடன்மீது அத்தகைய நிதியத்திற்குத் திரளும் வட்டி.

5. இரண்டாயிரத்து எட்டாம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (ஈஈஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன்மூலம் :-

"(ஈஈஈஈ) இப்பிரிவின் (ஈஈஈ) என்னும் பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், இலங்கையிலுள்ள ஏதேனும் வதிவுள்ள கம்பெனியால், எவரேனும் வதிவுள்ள தனியாளினால் அல்லது ஏதேனும் பங்காண்மையால் இலங்கைக்கு வெளியேயுள்ள எவரேனும் ஆளுக்கு அல்லது ஏதே னும் பங்காண்மைக்கு ஆற்றப்பட்ட ஏதேனும் சேவையிலிருந்து வெளிநாட்டு நாணயத்தில் ஈட்டப்பட்ட 2009, ஏப்பிறல் 1 ஆம் திகதி தொடங்கி 2011, மாச்சு 31 ஆம் திகதியன்று முடிவடையும் காலப்பகுதிக்கான இலாபங்களும் வருமானமும், அத்தகைய இலாபங்களும் வருமானமும் (நியாயமான செலவுகளாக ஆணையாளர் தலைமையதிபதியால் கருதப்பட்டவாறு இலங்கைக்கு வெளியே செலவிடப்பட்ட அத்தகைய தொகை எதுவுமிருப்பின், அதனைக் கழித்து) வங்கியொன்றின் ஊடாக இலங்கைக்கு அனுப்பப்படுமாயின்;";

(2) அப்பிரிவின் (ட) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை இடுவதன்மூலமும் :-

"(டட) எவரேனும் ஆளினால் எழுதப்பட்ட ஏதேனும் நூல் அவராலேயே வெளியிடப்பட்டதாயினுஞ்சரி அல்லது வேறு எவரேனும் ஆளினால் வெளியிடப்பட்டதாயினுஞ்சரி அதன் முதலாவது வெளியீட்டுத் தேதியிலிருந்து தொடங்கும் ஓராண்டு காலப்பகுதியொன்றுக்கு 2009 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய நூலின் விற்பனையிலிருந்து அல்லது வேறு எவையேனும் வழிமுறைகளிலிருந்து பெறப்பட்ட அத்தகைய ஆளின் இலாபங்களினதும் வருமானத்தினதும் அரைவாசி;

(டடட) 2009 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு ஏதேனும் நாடகத்தின் தயாரிப்பிலிருந்து அதன் முதலாவது பகிரங்க அரங்கேற்றத் தேதியிலிருந்து தொடங்கும் ஓராண்டு காலப்பகுதியொன்றுக்கு பெறப்பட்ட எவரேனும் ஆளின் இலாபங்களினதும் வருமானத்தினதும் அரைவாசி.

இப்பந்தியின் நோக்கத்திற்கு "நாடகம்" என்பது எழுதப்பட்ட, வாய்மொழிமூலமான அல்லது வேறுவகையிலான வாசகமொன்றின் அடிப்படையில் மேடையொன்றில் அல்லது வேறு ஏதேனும் பொருத்தமான இடைவெளியில் நடிகர்களால் நாடக அரங்கேற்றத்தின் ஊடக கூட்டாக அமைந்த ஒரு பகிரங்க அவையினருக்குக் கதையொன்றை அல்லது வேறு ஏதேனும் விவரண வடிவில் எடுத்துரைக்கும் நாடகமேடை அரங்கேற்றம் ஒன்று எனப் பொருள்படும் ;

(டடடட) 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏற்றுமதி அபிவிருத்திச் சபையால் ஏற்றுமதி அபிவிருத்தி சன்மான செயற்திட்டத்தின்கீழ் ஏற்றுமதியாளர் ஒருவருக்குச் செலுத்தப்பட்ட ஏதேனும் ஏற்றுமதி அபிவிருத்தித் தள்ளுபடி.".

(3) அப்பிரிவின் (ரர) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன்மூலமும் :-

"(ரரர) 2008 ஒற்றோபர் 21 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் இலங்கை அரசாங்கத்தினால் அல்லது அதன் சார்பில் வழங்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் எடுத்துரைக்கப்பட்ட ஏதேனும் இறைமை முறியின் வழங்குநரால் எவரேனும் வதிவற்ற ஆளுக்கு அல்லது இலங்கையிலுள்ள ஏதேனும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிக்கு விடயத்திற்கேற்ப செலுத்தப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்ட வட்டிக்கு அல்லது கழிவுக்குச் சமமான தொகையொன்று;

(ரரரர) இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட ஐக்கிய அரசுகளின் டொலர்களில் எடுத்துரைக்கப்பட்ட ஏதேனும் இலங்கை அபிவிருத்தி முறியின்மீது 2009 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் எவரேனும் ஆளுக்கு விடயத்திற்கேற்ப செலுத்தப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்ட வட்டிக்கு அல்லது கழிவுக்குச் சமமான தொகையொன்று ;

(ரரரரர) பின்வருபவரால் பெறப்பட்ட அல்லது அவருக்குத் திரளும் இலாபங்களும் வருமானமும் :

(i) பந்தி (ரரர) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் இறைமை முறியின் விற்பனையிலிருந்து எவரேனும் வதிவற்ற ஆளினால் அல்லது ஏதேனும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியால்; அல்லது

(ii) 2009, ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னா் பந்தி (ரரரர) என்பதில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் இலங்கை அபிவிருத்தி முறியின் விற்பனையிலிருந்து எவரேனும் ஆளினால்;";

(4) அப்பிரிவின் (லல) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன்மூலமும் :-

"(லலல)2009 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னா் விடயத்திற்கேற்ப ஏதேனும் பாடலின் அல்லது வேறு இசையமைப்பின் பாடலாசிரியரால் அல்லது இசையமைப்பாளரால் அல்லது பாடகரால் அத்தகைய பாடலிலிருந்து அல்லது இசையமைப்பிலிருந்து பெறப்பட்ட அல்லது அவருக்குத் திரண்ட ஏதேனும் இலாபம் அல்லது வருமானம்;";அத்துடன்

(5) அப்பிரிவின் (வவவ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன்மூலமும் :-

"(வவவவ) இச்சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கணக்கின் வரவிலிருக்கும் பணத்தைப் பயன்படுத்தி 2009 பெப்புருவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னா் பொருளாதார மீளெழுச்சிச் சான்றிதழ்களில் முதலீட்டிலிருந்து எவரேனும் ஆளினால் அல்லது ஏதேனும் பங்காண்மையால் பெறப்பட்ட அல்லது அத்தகைய ஆளுக்கு அல்லது பங்காண்மைக்குத் திரண்ட இலாபங்களும் வருமானமும் :

ஆயின், பொருளாதார மீளெழுச்சிச் சான்றிதழ்களிலான முதலீடு பகுதியளவில் 2009, பெப்புருவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னா் வைப்பீடுசெய்யப்பட்ட பணத்தையும் பகுதியளவில் அத்தேதியன்றுள்ளவாறு கணக்கில் ஏற்கனவே வரவிலிருந்த பணத்தையும் பயன்படுத்தி செய்யப்படுமிடத்து. இப்பந்தியால் அளிக்கப்பட்ட வருமானவரி விலக்களிப்பு 2009 பெப்புருவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னா் செய்யப்பட்ட வைப்பீடுகளிலிருந்தான பணத்திற்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான இலாபங்களினதும் வருமானத்தினதும் அத்தகைய பாகத்திற்கு மாத்திரம் ஏற்புடையதாதல் வேண்டும்.".

6. இரண்டாயிரத்து ஏழாம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 16ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "தேயிலை உற்பத்திக்கான பொறுப்புமுயற்சியொன்றைத் தவிர (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "விளைபொருளைச் சந்தைப்படுத்துவதற்குத் தயார் பண்ண (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்˙

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :-

"(3) ஏதேனும் கமத்தொழில், காய்கறி மற்றும் பழப்பயிச்செய்கை அல்லது பாற்பண்ணை விளைபொருளின் உற்பத்தியைக்கொண்டதும் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் உற்பத்திப்பொருளைத் தவிர, ஏதேனும் உற்பத்திப் பொருளைத் தயாரிப்பதற்கு அத்தகைய விளைபொருளைப் பயன்படுத்து கின்றதுமான பொறுப்பு முயற்சியொன்று தொடர்பில் அத்தகைய விளைபொருள் அத்தகைய உற்பத்திப் பொருளின் உற்பத்திக்கென அத்தகைய கருதப்பட்ட விற்பனையின் நேரத்தில் திறந்த சந்தையில் நிலவிய விலையின்படி விற்பனை செய்யப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், (1) ஆம் உட்பிரிவின்கீழான விலக்களிப்பானது அத்தகைய கருதப்பட்ட விற்பனையின் அடிப்படையில் கணிப்பிடப்பட்ட இலாபங்கள் மற்றும் வருமானம் என்பவற்றின்மீது அப்பொறுப்பு முயற்சிக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.".

7. இரண்டாயிரத்து எட்டாம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் பின்வருமாறு இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :-

(1) அதன் பந்தி (இ) என்பதில் "மொத்த அளவிலான கருந்தேயிலை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சிப்பத்தின் அல்லது பொதியின் வடிவத்தில் இல்லாததும் ஒவ்வொரு சிப்பமும் அல்லது பொதியும் ஒரு கிலோ கிராமுக்கு மேற்படாத எடையையுடையதுமான கருந்தேயிலை" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) அதன் பந்தி (ஈ) என்பதில் "எவரேனும் ஆளினால் அல்லது பங்குடைமையால் எவையேனும் வியாபாரப் பண்டங்களின் (மொத்த அளவிலான கருந்தேயிலை," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எவரேனும் ஆளினால் அல்லது பங்காண்மையால் எவையேனும் வியாபாரப் பண்டங்களின் (சிப்பத்தின் அல்லது பொதியின் வடிவத்தில் இல்லாததும் ஒவ்வொரு சிப்பமும் அல்லது பொதியும் ஒரு கிலோ கிராமுக்கு மேற்படாத எடையையுடையதுமான சிப்பங்களில் விற்பனைசெய்யப்படும் கருந்தேயிலை" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24அ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அதன் (ஆ) என்னும் பந்தியில் "ஐந்து ஆண்டுகளைக்கொண்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏழு ஆண்டுகளைக் கொண்ட" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "ஐந்து ஆண்டுகளைக்கொண்ட காலப்பகுதி" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏழு ஆண்டுகளைக்கொண்ட காலப்பகுதி" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவு அதன் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்கான இரண்டாவது காப்பு வாசகம் "இப்பந்தியிலுள்ள எதுவும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "(அ) அல்லது (ஆ) என்னும் பந்தியிலுள்ள எதுவும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது.

10. இரண்டாயிரத்து எட்டாம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவு அதன் (2) ஆம் உட்பிரிவில் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-

(1) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ix) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய காப்புவாசகத்தைச் சேர்ப்பதன்மூலமும் :-

"ஆயின், இப்பந்தியின் (v) ஆம் உட்பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட நிதியம் 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க சனாதிபதியின் நிதியச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட சனாதிபதியின் நிதியமாக இருக்குமிடத்தும் அத்துடன் ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் எவையேனும் இலாபங்களை சனாதிபதியின் நிதியத்திற்கு அனுப்புமாறு அத்தகைய கூட்டுத்தாபனம் எந்தச் சட்டத்தின் நியதிகளால் அல்லது நியதிகளின்கீழ் தாபிக்கப்பட்டதோ அந்தச் சட்டத்தால் அத்தகைய பகிரங்கக் கூட்டுத்தாபனம் தேவைப்படுத்தப்படுமிடத்தும் அவ்வாறு அனுப்பப்பட்ட இலாபங்கள் இப்பந்தியின் நோக்கத்திற்கு அத்தகைய நிதியத்திற்குச் செய்யப்பட்ட நன்கொடைகளாகக் கருதப்படுதல் வேண்டும்;";

(2) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியில் "விலக்களிக்கப்படாதிருப்பின்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "விலக்களிக்கப்படாதிருக்குமிடத்து" என்னும் சொல்லை இடுவதன்மூலமும் ;

(3) அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின் (xi) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(xii) 1968 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை பொறியியலாளர் நிறுவகச் சட்டத்தால் கூட்டிணைக்கப்பட்ட இலங்கைப் பொறியியலாளர் நிறுவகம்;"

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 40அ என்னும் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

"எவரேனும் விமானமோட்டின் தொழிலிருந்து வரும் இலாபங்கள் மீது வருமானவரி வீதங்கள்

40அ. இரண்டாயிரத்தெட்டு ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு எவரேனும் இலங்கைப் பிரசையொருவராக இருக்கும் எவரேனும் தனியாளின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் (365 ஆம் அத்தியாயமான) வான்செலவுச் சட்டத்தின்கீழ் உரிமம்பெற்ற ஏதேனும் விமான நிறுவனத்தின்கீழ் விமானமோட்டியொருவராக தொழிலிருந்து வரும் இலாபங்களை உள்ளடக்குமிடத்தும் (இதனகத்துப்பின்னர் இப்பிரிவில் "இயைபான இலாபங்கள்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அத்துடன் அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் பாகமொன்றின்மீது (இதனகத்துப்பின்னர் இப்பிரிவில் "வரிவிதிக்கப்படற்பாலதான இயைபான பாகம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) செலுத்தப்படற்பாலதான வருமானவரியின் வீதம் இருபது சதவீதத்தை விஞ்சுமிடத்தும் அப்போது வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் இயைபான பாகம் தொடர்பில் செலுத்தப்படற்பாலதான வரி பின்வருமாறு கணிப்பிடப்படுதல் வேண்டும் :-

(அ) வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் அத்தகைய இயைபான பாகம் இயைபான இலாபங்களின் தொகையை விஞ்சுமிடத்து -

(i) அத்தகைய இயைபான இலாபங்களின் தொகைக்குச் சமனாயிருக்கின்றவாறு வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் இயைபான பாகத்தின் அத்தகைய பகுதியின்மீது செலுத்தப்படற்பாலதான வரியானது இருபது சதவீதப்படி கணிப்பிடப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ii) வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் இயைபான பாகத்தின் மீதியின்மீது செலுத்தப்படற்பாலதான வரி, இச்சட்டத்திற்கான முதலாவது அட்டவணையின்கீழ் அதற்கு ஏற்புடைத்தாகின்றவாறான இருபது சதவீதத்திற்கு மேற்பட்ட அத்தகைய எவையேனும் வீதங்களுக்கிணங்க கணிப்பிடப்படுதல் வேண்டும்.

(ஆ) வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் அத்தகைய இயைபான பாகமானது இயைபான இலாபங்களின் தொகையை விஞ்சாதவிடத்து வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் இயைபான பாகம் முழுவதன்மீது செலுத்தப்பற்பாலதான வரியானது இருபது சதவீதப்படி கணிப்பிடப்படுதல் வேண்டும்.''.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 40அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 40ஆ என்னும் பிரிவு என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும் :-

தகைமை பெற்ற தனியாட்களின் தகைமை பெற்ற இலாபங்களின் மீதான வரி வீதம்

40ஆ. (1) இரண்டாயிரத்து ஒன்பது ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு எவரேனும் தகைமைபெற்ற தனியாளின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் எவரேனும் தகைமைபெற்ற ஆளின்கீழ் தொழிலிலிருந்து வெளிநாட்டு நாணயத்தில் (இதனகத்துப்பின்னர் இப்பிரிவில் "தகைமைபெற்ற இலாபங்கள்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) எவையேனும் இலாபங்களை உள்ளடக்குமிடத்தும் அத்துடன் அத்தகைய வரி விதிக்கப்படற்பாலதான வருமானத்தின் பாகமொன்றின்மீது செலுத்தப்படற்பாலதான வருமானவரி வீதம் (இதனகத்துப்பின்னர் இப்பிரிவில் "வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் இயைபான பாகம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இருபது சதவீதத்தை விஞ்சுமிடத்தும் அப்போது வரிவிதிக்கப்படற்பால தான வருமானத்தின் இயைபான பாகம் தொடர்பில் செலுத்தப்படற்பாலதான வரி (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பின்வருமாறு கணிப்பிடப்படுதல் வேண்டும் :-

(அ) வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் இயைபான பாகம் அத்தகைய தகைமைபெற்ற இலாபங்களின் தொகையை விஞ்சுமிடத்து -

(i) அத்தகைய தகைமைபெற்ற இலாபங்களின் தொகைக்குச் சமமானவாறு வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் இயைபான பாகத்தின் அத்தகைய பகுதியின்மீது செலுத்தப்படற்பாலதான வரி யானது இருபது சதவீதப்படி கணிப்பிடப்படுதல் வேண்டும் ;

(ii) வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் இயைபான பாகத்தின் மீதியின் மீது செலுத்தப்படற்பால தான வரியானது இச்சட்டத்திற்கான முதலாவது அட்டவணையின் கீழ் அதற்கு ஏற்புடைத்தாகின்றவாறு இருபது சதவீதத்திற்கு மேற்பட்ட அத்தகைய வீதங்களுக்கிணங்க கணிப்பிடப்படுதல் வேண்டும்.

(ஆ) வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் அத்தகைய இயைபான பாகம் தகைமைபெற்ற இலாபங்களின் தொகையை விஞ்சாதவிடத்து, வரி விதிக்கப்படற்பாலதான வருமானத்தின் தகைமைபெற்ற பாகம் முழுவதன்மீதும் செலுத்தப்படற்பாலதான வரி இருபது சதவீதப்படி கணிப்பிடப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தகைமைபெற்ற ஆள், அத்தகைய தகைமைபெற்ற ஆளினால் தொழிலுக்கமர்த்தப்பட்ட தகைமை பெற்ற தனியாட்கள் அனைவருக்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டு ஆண்டில் செலுத்தப்பட்ட தகைமை பெற்ற இலாபங்களின் கூட்டு மொத்தம், வரி மதிப்பீட்டாண்டிற்கு உடன்முன்னரான வரிமதிப்பீட்டாண்டில் அத்தகைய தகைமைபெற்ற ஆளினால் வெளிநாட்டு நாணயத்தில் சம்பாதிக்கப்பட்டவை தகைமைபெற்ற இலாபங்களின் கூட்டுமொத்தம் அத்தகைய தகைமைபெற்ற ஆளின் எந்த வெளிநாட்டு நாணயத்திலான மொத்தச் சம்பாத்தியத்தின் தொகைக்கு 13 ஆம் பிரிவின் (ஈஈஈ) என்னும் பந்தியின்கீழ் ஏற்றிக் கூறப்படற்பாலதான இலாபங்களும் வருமானமும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுகின்றனவோ அல்லது அத்தகைய தகைமைபெற்ற ஆள் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச்சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் ஏதேனும் உடன்படிக்கையைச் செய்து கொண்டிராதிருந்திருப்பின் அப்பந்தியின் கீழ் விலக்களிக்கப்பட்டிருந்திருக்கக் கூடுமோ அந்த வெளிநாட்டு நாணயத்திலான மொத்தச் சம்பாத்தியத்தின் தொகையை விஞ்சாதிருக்கின்றது என அத்தாட்சிப்படுத்தினாலன்றி அவ்வுட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலாகாது.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்கு -

(அ) "தகைமைபெற்ற தனியாள்'' என்பது, தகைமைபெற்ற ஆளொருவரின் ஊழியர் ஒருவராக இருக்கின்றவரும் 13 ஆம் பிரிவின் (ஈஈஈ) என்னும் பந்தியின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியால் குறித்துரைக்கப்பட்டவாறு ஏதேனும் உயர் தொழிலின் அல்லது வாழ்க்கைத் தொழிலின் நெறிமுறையின்போது ஆற்றப்படும் ஒரு சேவையாகவுள்ள ஏதேனும் சேவையை அத்தகைய தொழிலின் நடைமுறையின் போது வழங்குகின்றவருமான தனியாள் ஒருவர் எனப் பொருள்படும்; அத்துடன்

(ஆ) "தகைமைபெற்ற ஆள்'' என்பது, எந்த ஆளின் அல்லது பங்காண்மையின் இலாபங்கள் அல்லது வருமானம் முழுவதும் அல்லது அதன் ஒரு பாகம் 13 ஆம் பிரிவின் (ஈஈஈ) என்னும் பந்தியின்கீழ்

வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுகின்றதோ அல்லது அத்தகைய ஆள் அல்லது பங்காண்மை 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் ஏதேனும் உடன்படிக்கையைச் செய்து கொண்டிராதிருந்திருப்பின் அத்தகைய பந்தியின்கீழ் விலக்களிக்கப்பட்டிருந்திருக்கக் கூடுமோ அந்த எவரேனும் ஆள் அல்லது ஏதேனும் பங்காண்மை எனப் பொருள்படும்.".

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவு, "வெளிநாட்டு நாணயத்திலான எவையேனும் இலாபங்களையும் வருமானத்தையும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2008 மாச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவுற்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் வெளிநாட்டு நாணயத்திலான எவையேனும் இலாபங்களையும் வருமானத்தையும்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 60 ஆம் பிரிவு அதிலுள்ள "பாரியம்பரியமற்ற பண்டங்கள்" என்பது, "தொகையான கருந்தேயிலை தவிர்ந்த கிறேப் இரப்பர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பாரம்பரியமற்ற பண்டங்கள்" என்பது 'ஒரு கிலோ கிராமுக்கு மேற்பட்ட எடையினையுடைய சிப்பங்களின் அல்லது பொதிகளின் வடிவில் இல்லாததும் ஒவ்வொரு சிப்பமும் அல்லது பொதியும் கருந்தேயிலையைத் தவிர்த்து கிறேப் இரப்பர்' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

15. இரண்டாயிரத்து ஏழாம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 78 ஆம் பிரிவு அப்பிரிவின்(3) ஆம் உட்பிரிவில், "2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின்கீழ் செலுத்தப்பட்ட" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதார சேவை விதிப்பனவுச் சட்டத்தின்கீழ் செலுத்தப்பட்ட" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது.

16. இரண்டாயிரத்து ஏழாம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 106 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் :-

(அ) "செத்தெம்பர் மாதத்தின் முப்பதாம் நாளன்று" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நவெம்பர் மாதத்தின் முப்பதாம் நாளன்று" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவிற்கான காப்புவாசகத்தின் (அ) என்னும் பந்தியை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :

"(அ) நாலாம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறானவையும் -

(i) அத்தகைய வரிமதிப்பீட்டாண்டு 2009 மாச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் முடிவடையும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டாக இருக்குமிடத்து நாலு இலட்சத்து இருபதினாயிரம் ரூபாவை ; அல்லது

(ii) அத்தகைய வரிமதிப்பீட்டாண்டு 2009 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டாக இருக்குமிடத்து ஒரு மில்லியன் ரூபாவை,

விஞ்சாத வருமான வரி விதிக்கப்படற்பாலனவையும் XIV ஆம் அத்தியாயத்தின்கீழான வருமானவரி தொழில்தருநரினால் கழிப்பனவு செய்யப்பட்டுள்ளதுமான, ஊழியத்திலிருந்தான இலாபங்கள்;"; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "செத்தெம்பர் 30 ஆம் தேதியன்று அல்லது அதற்குமுன்னர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நவெம்பர் முப்பதாம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர்"; என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

17. இரண்டாயிரத்து எட்டாம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 113 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:

(1) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "செத்தெம்பர் முப்பதாம் நாளன்று" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒற்றோபர் முப்பதாம் நாளன்று" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் "தனியாள்" என்னும் சொல் காணப்படும் இடங்களிலெல்லாம் அத்தகைய சொல்லுக்குப் பதிலாக "தனியாட்கள்" என்னும் சொல்லை இடுவதன்மூலமும்.

18. இரண்டாயிரத்து எட்டாம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 133 ஆம் பிரிவு அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :-

(1) அதன் (ii) ஆம் உட்பந்தியில். "600,000 ரூபாவை விஞ்சவில்லையெனவும்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "1,000,000 ரூபாவை விஞ்சவில்லையெனவும்" என்னும் சொற்களையும் இலக்கத்தையும் இடுவதன்மூலமும்;

(2) அதன் (iii) ஆம் உட்பந்தியில் "600,000 ரூபாவை விஞ்சுகின்றதென" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, 1,000,000 ரூபாவை விஞ்சுகின்றதென" என்னும் சொற்களையும் இலக்கத்தையும் இடுவதன்மூலமும்.

19. இரண்டாயிரத்து ஏழாம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 153 ஆம் பிரிவு அதன் (2) ஆம் உட்பிரிவில், "குறித்துரைக்கப்பட்ட கட்டணம்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில், "(அ) அம்மதிப்பீட்டாண்டில் ஏதேனும் மாதத்திற்கு ஐம்பதாயிரம் ரூபா; அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "(அ) ஏதேனும் பஞ்சாங்க மாதத்துக்கு ஐம்பதினாயிரம் ரூபா; அல்லது" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

20. இரண்டாயிரத்து எட்டாம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 163 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "செத்தெம்பர்" என்னும் சொல் காணப்படும் இடங்களிலெல்லாம் அச்சொல்லுக்குப் பதிலாக, "நவெம்பர்" என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ;

(2) அவ்வுட்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் :-

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "செத்தெம்பர் முப்பதாம் தேதியன்று" என்னும் சொற்களுக்கும் "பதினெட்டு மாதங்கள் கழிந்தபின்னர்" என்னும் சொற்களுக்கும் பதிலாக முறையே "நவெம்பர் முப்பதாம் தேதியன்று" என்னும் சொற்களையும் "இரண்டு ஆண்டுகளைக்கொண்டவொரு காலப்பகுதி கழிந்தபின்னர்" என்னும் சொற் களையும் இடுவதன்மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "மூன்று ஆண்டுகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நான்கு ஆண்டுகள்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 173 ஆம் பிரிவு அதன் (2) ஆம் பிரிவில், "பிரிவு 113(3) பிரிவில் அல்லது 113(4) ஆம் பிரிவில்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "113 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவில்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

22. இரண்டாயிரத்து ஏழாம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 200 ஆம் பிரிவு அப்பிரிவின் (8) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(8) எவரேனும் ஆளினால் அவரது முழு வருமானம் தொடர்பில் அல்லது அதன் ஏதேனும் பாகம் தொடர்பில், அத்தகைய வருமானம் அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அவரது வரிமதிப்பிடற்பாலதான வருமானத்தில் உள்ளடக்கப்படாதிருப்பின், இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளிலுள்ள எதுவும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்குக் கழிப்பனவு மூலம் அல்லது வேறுவகையாக செலுத்தப்பட்ட வருமானவரி தொடர்பில், ஏற்புடையதாதலாகாது.".

23. இரண்டாயிரத்து எட்டாம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 217 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) "ஆணையாளர் தலைமையதிபதியால் அங்கீகரிக்கப்பட்ட" என்னும் சொற்றொடரின் வரைவிலக்கணத்தை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :-

' "ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட" என்பது, ஓய்வூதிய, சகாய, பணிக்கொடை அல்லது சேமிப்பு நிதியமொன்று தொடர்பில் பயன்படுத்தப்படும் பொழுது அத்தகைய ஏதேனும் நிதியம் தொடர்பில் ஒன்றில் பொது வாகவோ அன்றேல் விசேடமாகவோ ஏதேனும் அத்தகைய நிதியத்திற்கு உதவுதொகையளிப்பவர்களினது நலனின் பாதுகாப்பிற்கும் அரசிறையின் பாதுகாப்பிற்குமான தேவையைக் கருத்திற்கொண்டு வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் ஆணையாளர் தலைமையதிபதியால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கு இணங்கியிருப்பதாக அவரால் அங்கீகரிக்கப்பட்டதெனப் பொருள்படும்'; அத்துடன்

(2) "வரிமதிப்பீட்டாளர்" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப்பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :-

' "இணைக் கம்பனி" என்பது, எந்தக் கம்பனியின் மீது முதலீடு செய்யும் கம்பனியொன்று குறிப்பிடத்தக்க செல்வாக்கைக் கொண்டுள்ளதும் முதலீடுசெய்யும் கம்பனியின் துணைநிலைக் கம்பனியொன்றாகவோ முதலீடு செய்யும் கம்பனியை ஒரு பங்காளராகக் கொண்டுள்ள கூட்டுத்தொழில் முயற்சியொன்றாகவோ அல்லாதுமானவொரு கம்பனி என்று பொருள்படும்.'.

24. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) "பாகம் II அல்லது பாகம் III என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவரைத் தவிர்ந்த வேறு எவரேனும் தனியாள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2009 மாச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடையும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு பாகம் II அல்லது பாகம் III என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு தனியாள் தவிர்ந்த வேறு எவரேனும் தனியாள்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அவ்வட்டணையின் பாகம் I என்பதனை உடனடுத்துப் பின்வரும் புதிய பாகத்தை உட்புகுத்துவதன் மூலமும்-

" பாகம் Iஅ

2009, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு பாகம் II அல்லது பாகம் III என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு தனியாள் தவிர்ந்த தனியாள் எவரேனும்,

| | |
|---|---|
| வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் முதலாவது 400,000 ரூபாமீது | 05 சதவீதம் |
| வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் அடுத்த 400,000 ரூபாமீது | 10 சதவீதம் |
| வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் அடுத்த 400,000 ரூபாமீது | 15 சதவீதம் |
| வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் அடுத்த 500,000 ரூபாமீது | 20 சதவீதம் |
| வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் அடுத்த 500,000 ரூபாமீது | 25 சதவீதம் |
| வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் அடுத்த 500,000 ரூபாமீது | 30 சதவீதம் |
| வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் மீதியின் மீது | 35 சதவீதம்.". |

25. முதன்மைச் சட்டவாக்கத்தின் இரண்டாம் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அவ்வட்டவணையின் "பாகம் அ" என்பதன் 1 ஆம் விடயத்தில், "தொழில் முயற்சி மூலதனக் கம்பனி" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தொழில் முயற்சி மூலதனக் கம்பனி" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அவ்வட்டவணையின் "பாகம் ஆ" என்பதன் 2 ஆம் விடயத்தில் "அக்கம்பனியின் வரி விதிக்கற்பாலதான" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "அக்கம்பனியின்" அல்லது அந்த ஏதேனும் கம்பனி கொளிக் கம்பனியொன்றாக, துணை நிலைக் கம்பனியொன்றாக அல்லது இணைக் கம்பனியொன்றாக அல்லது கம்பனிகளின் தொகுதியொன்றின் இணைக் கம்பனியொன்றாக இருப்பின் வரி விதிக்கற்பாலதான" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

26. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

27. (1) முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் பந்தி (உ), 78 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவு, 113 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவு, 153 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவு, 173 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவு என்பவற்றிற்கு

முறையே இச்சட்டத்தின் 10(2) ஆம், 15 ஆம் பிரிவாலும் 17 ஆம், 19 ஆம், 21 ஆம் பிரிவுகளாலும் செய்யப்பட்ட திருத்தங்கள் எல்லா நோக்கங்களுக்காகவும் 2006 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) முதன்மைச் சட்டவாக்கத்திற்கான இரண்டாம் அட்டவணைக்கு இச்சட்டத்தின் 25 ஆம் பிரிவால் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 2007 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 8, பிரிவு 40அ அத்துடன் பிரிவு 57 என்பவற்றிற்கு முறையே இச்சட்டத்தின் பிரிவு 3(1) அத்துடன் (2), பிரிவு 11 அத்துடன் பிரிவு 13 என்பவற்றால் செய்யப்பட்ட திருத்தங்கள் எல்லா நோக்கங்களுக்காகவும் 2008 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவிற்கு இச்சட்டத்தின் 5(2) ஆம் பிரிவால் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 2008 ஒற்றோபர் 21 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) இச்சட்டத்தின் 13 ஆம் பிரிவுக்கு அதன் 5 (4) ஆம் பிரிவால் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 2009 பெப்புருவரி 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) இப்பிரிவின் உட்பிரிவுகள் (1), (2), (3), (4) அத்துடன் (5) என்பவற்றில் குறிப்பாகக் குறிப்பீடுசெய்யப்பட்ட திருத்தத்தைத் தவிர, இச்சட்டத்தால் முதன்மைச் சட்டவாக்கத்திற்குச் செய்யப்பட்ட திருத்தம் 2009 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வருதல் வேண்டும்.

## 2009ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டம்

[2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

**2009ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

1. இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப் படலாம்.

2. (இதனகத்துப்பின்னா் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தின் 3 ஆம் பிரிவிலுள்ள, "ஏற்பாடுகளுக்கமைய ஒரு சதவீதம் என்ற வீதத்தல் கணக்கிடப்பட்டு, இச்சட்டம் ஏற்புடைத்தாகின்ற ஒவ்வோா் ஆளிடமிருந்தும் பின்வரும் முறையில் இறுக்கப்படுதல் வேண்டும்:-" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

"ஏற்பாடுகளுக்கமைய -

(அ) 2009, ஏப்பிறல் 30 ஆந் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதிக்காக ஒரு சதவீதம் என்ற வீதத்திலும்; அத்துடன்

(ஆ) 2009, மே 1 ஆந் தேதியன்று தொடங்குகின்ற காலப்பகுதிக்காக மூன்று சதவீதம் என்ற வீதத்திலும்,

கணக்கிடப்பட்டு, இச்சட்டம் ஏற்புடையதாகின்ற ஒவ்வோா் ஆளிடமிருந்தும் பின்வரும் முறையில் இறுக்கப்படுதல் வேண்டும் :-".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு, அதன் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சோ்ப்பதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

"(ஈ) இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் இயைபான காலாண்டுக்கான விபரத்திரட்டானது அத்தகைய காலாண்டின் முடிவை உடனடுத்து தொடங்குகின்ற மாதத்தின் இருபதாம் நாளன்று அல்லது அதற்கு முன்னராக கொடுத்துதவுதல் வேண்டும்.".

4. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணை இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

(1) பாகம் I இல் -

(அ) அதன் (iii) ஆம் விடயத்துக்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும் :-

“(iii) இச்சட்டம் ஏற்புடையதாகின்ற எவரேனுமாளினால் எவரேனும் ஏற்றுமதியாளருக்கு விற்பனை செய்யப்பட்ட-

(i) ஏதேனும் பொருள்; அல்லது

(ii) எந்த உற்பத்தி செய்யப்பட்ட வேறேதேனும் பொருட்களில் அத்தகைய பொருள் மூலக்கூறு ஒன்றாக இருக்கின்றதோ அந்த உற்பத்தி செய்யப்பட்ட ஏதேனும் வேறு பொருள்,

உண்மையில் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதென ஆணையாளர் தலைமையதிபதி ஏதேனும் ஆவணமுறையான சான்று காண்பிக்கப்படுவதன்மேல் திருப்திப்படின், அத்தகைய பொருள்.”.

(ஆ) அதன் (xiv) ஆம் விடயத்தை உடனடுத்துப்பின் வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன்மூலமும்:-

“(xv) நாட்டுக்கான பொருளாதார நன்மையைக் கருத்திற்கொண்டு தோதான அமைச்சரினாலும் நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினாலும் அங்கீகரிக்கப்பட்ட எந்தக் கருத்திட்டத்தின் மீது வரி அரசாங்கத்தினால் பொறுக்கப்பட்டுள்ளதோ அந்தக் கருத்திட்டத்தில் பயன்படுத்துவதற்கான ஏதேனும் பொருள்.”.

(2) பாகம் II இல், அதன் (xxii) ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன் மூலமும் :-

“(xxiii) 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட எவரேனும் “பொது விற்பனைகள் முகவரின்” சேவைகள்.”.

5. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2009ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க, இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழு (திருத்தச்) சட்டம்

[2009ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

### 1987ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவானது (இதனகத்துப்பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

“(ii) தனியார் துறையிலிருந்து ஆணைக்குழுவின் பல்லின ஒழுக்காற்று முறையான பண்பைப் பிரதிபலிப்பதற்காக சட்டம், நிதி, வங்கித் தொழில் மற்றும் தொழில் துறையில் உயர்தொழில் நிபுணத்துவத்தையும் பரந்த அனுபவத்தையும் மற்றும் எண்பிக்கப்பட்ட தகுதியையும் கொண்டுள்ள வேறு ஆறு ஆட்கள்.”.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவானது அதன் (இ) என்னும் பந்தியினை உடனடுத்துப்பின்னர் பின்வரும் பந்தியினை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

“(இஇ) நிரற்படுத்தப்பட்ட பகிரங்க கம்பெனிகளுக்கு காலத்துக்குக் காலம் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட பணிப்புகளை வழங்குதல்.”.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவானது “பிணையங்கள்” என்னும் சொல்லின் வரைவிலக்கணத்திற்குப் பதிலாக பின்வரும் வரைவிலக்கணத்தினை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

“பிணையங்கள்” என்பது, எந்தச் சொத்துக்கள்மீது தங்கியிருக்கப்படுகின்றதோ அந்தச் சொத்துக்களை ஆதாரமாகக் கொண்ட எத்தன்மையதுமான கூட்டிணைக்கப்பட்டதாயினுஞ்சரி அல்லது கூட்டிணைக்கப்படாததாயினுஞ்சரி ஏதேனும் அரசாங்க அல்லது ஏதேனும் குழுமத்தால் வழங்கப்பட்ட அல்லது வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்ட வருங்காலங்களும் விருப்புத் தெரிவுகளும் உட்பட அல்லது அதன்கண்ணுள்ள அல்லது அது தொடர்பிலான எவையேனும் உரிமைகள், விருப்புத் தெரிவுகள் அல்லது அக்கறைகள் உட்பட (கூறுகளாக விவரிக்கப்பட்டனவாயினுஞ்சரி அல்லது வேறு வகையின

வாயினுஞ்சரி) தொகுதிக் கடன்கள், பங்குத் தொகுதிகள், பங்குகள், நிதிகள், முறிகள், பெறுதிகள் அல்லது பிணையங்கள் எனப் பொதுவாக அறியப்படும் வேறு எவையேனும் சாதனங்கள் எனப் பொருள்படும், ஆனால் வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட நாணய மாற்றுண்டியல்களை அல்லது வாக்குறுதிப்பத்திரங்களை அல்லது வைப்புச் சான்றிதழ்களை உள்ளடக்காது.".

5. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2009ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க, பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டம்

[2009ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

**அசைவுள்ள ஆதனங்கள் தொடர்பிலான கடப்பாடுகளின் உத்தரவாதத்துக்கும், பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் இடாப்பொன்றைப் பேணுவதற்கும் மேலும் அத்துடன் தொடர்புபட்ட கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

1. இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரால் நியமிக்கப்படும் (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட திகதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

### பாகம் I

சட்டத்தின் ஏற்புடைமை

2. வேறேதேனும் சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும்,-

(அ) ஏதேனும் அசைவுள்ள ஆதனத்தை அடகுவைக்கும், அதுபற்றிய கொள்வனை உடன்படிக்கையொன்றைச் செய்யும், நிபந்தனைமீதான உரித்துமாற்றம் செய்யும், நிதிக்குத்தகை உடன்படிக்கைசெய்யும் அல்லது ஈடுவைக்கும், கணக்குகளை அல்லது வேறு அனுப்பு சரக்கின் கொடுப்பனவுக்கான உரிமைகளைச் சாட்டுதல் செய்யும்; அல்லது

(ஆ) கணக்குகள் மற்றும் பண்டம்பணிப் பத்திரத்தின் விற்பனைக்கான உடன்படிக்கையொன்றைச் செய்யும்; அல்லது

(இ) அசைவுள்ள ஆதனம் ஒன்று தொடர்பில் ஓராண்டுக்கு மேலான ஒரு காலத்துக்கு குத்தகை உடன்படிக்கையொன்றைச் செய்கின்ற; அல்லது

(ஈ) 1990 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச் சீட்டுக்கள் சட்டத்தின் 2ஆம் பிரிவின் நியதிகளின்படி ஏதேனும் பொறுப்பேற்றலைச் செய்கின்ற; அல்லது

(உ) (அத்தியாயம் 86) நம்பிக்கைப் பொறுப்பு பற்றுச்சீட்டுகள் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் நியதிகளின்படி இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்பட்ட ஏதேனும் பண்டத்தொகுதியைப் பொறுப்பேற்புச் செய்கின்ற,

எவரேனும் ஆள், (அ), (ஆ), (இ), (ஈ) அல்லது (உ) என்னும் விடயங்களில் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய அடகை, ஈட்டை அல்லது கடப்பாட்டை இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, துணைமைப் பொருளொன்று கொண்டு உத்தரவாதஞ் செய்யலாம்.

ஆயின், எவ்வாறாயினும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் ஏற்புடைமை துணைமைப்பொருளின் சொத்தாண்மையில் தங்கியிருத்தலாகாது.

ஆயின் மேலும், அத்தகைய கடப்பாட்டின் காலம் ஓராண்டுக் காலத்தை விஞ்சுதல் வேண்டும்.

3. பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இச்சட்டத்தின் ஏற்புடைமையிலிருந்து விலக்கப்படுதல் வேண்டும்:-

(அ) ஒரு தொழிலாளியின் இழப்பீட்டுக்கான கோரிக்கையொன்றின் கைமாற்றம்;

(ஆ) ஒரு வியாபார விற்பனையொன்றின் பாகமாக எழும் கணக்குகளின் அல்லது பண்டம் பணிப் பத்திரங்களின் விற்பனை;

(இ) சேகரிப்பு நோக்கத்துக்காக மட்டும் காரணகர்த்தாவாகவமைந்த கணக்குகளின் அல்லது பண்டம் பணிப் பத்திரங்களின் சாட்டுகை;

(ஈ) சாட்டுணியொருவருக்கு கொடுப்பனவுக்கான உரிமையைச் சாட்டுதல் செய்வதற்கான ஒப்பந்தமொன்றின் கீழான ஒரு கடப்பாடு; அத்துடன்

(உ) முறையே 2009 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மோட்டார் போக்குவரத்துச் சட்டம், 1979 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, இலங்கைத் துறைமுக அதிகாரசபைச் சட்டம், 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிக கப்பற்றுறைச் சட்டம், 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, குடியியல் வான்செலவு அதிகாரசபைச் சட்டம் என்பவற்றின்கீழ் பண்டங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளவிடத்து, உபகரணமாக அல்லது நுகர்வுப் பண்டமாக கடனாளியால் வைத்திருக்கப்படும் பண்டங்களிலான ஓர் அக்கறையின் கைமாற்றம்.

4. இச்சட்டத்தின் குறிக்கோளானது, குறித்துரைக்கப்பட்ட விதமாக, 2 ஆம், 3 ஆம் பிரிவுகளினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட துணைமைப்பொருளைப் பயன்படுத்துவதன்மூலம் இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட அடகு, ஈடு அல்லது கடப்பாடொன்றைப் பெறுவதனால் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன்கீழாக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்குமிணங்க தேசிய பொருளாதாரத்தினதும் பொருளாதாரச் செயற்பாட்டினதும் அக்கறையை மேம்படுத்துதலாகும்.

5. எவரேனும் ஈடுகொளி அல்லது அடகுகொளி, நிபந்தனை மீது கைமாற்றுவோன், குத்தகையளிப்போன், சாட்டுதல்செய்வோன் அத்தகைய ஈடு, அடகு, நிபந்தனைமீதான கைமாற்றம், நிதிக்குத்தகை அல்லது சாட்டுகையை உத்தரவாதம் செய்வதற்காக துணைமைப்பொருளொன்றை ஏற்றுக்கொள்ளலாம்:

ஆயின், எவ்வாறாயினும் அத்தகைய ஆளெவரும் கடனாளிக்குச் சொந்தமான நுகர்வுப் பண்டங்களின் கொள்வனைப் பணத்துக்கான பிணைப்பொறுப்பு அக்கறை தவிர்ந்த வேறேதேனும் பிணைப்பொறுப்பு அக்கறை எதனையும் ஏற்றுக்கொள்ளுதலாகாது :

ஆயின் மேலும், அத்தகைய பிணைப்பொறுப்பு அக்கறையானது, அத்தகைய பிணைப்பொறுப்பை கடனாளி பயன்படுத்தும், விற்கும், கொடுத்து மாற்றும் அல்லது வேறுவகையில் கையுதிர்க்கும் உரிமையை நுகர்வதன் காரணமாக வறிதற்றதாகுமெனக் கருதப்படாது விடலாம்.

6. ஒரு கடப்பாடுக்கு பிணைப்பொறுப்பளிக்கப்படுவதற்கு ஒரு கடனாளியால் முன்வைக்கப்படும் ஒரு துணைமைப் பொருள் மீதான ஏதேனும் அக்கறை ஒன்றுக்கு மேற்பட்ட கடப்பாடுகளுக்குப் பிணைப்பொறுப்பாகப் பயன்படுத்தப்படலாம்.

## பாகம் II

### பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்

7. (1) இதனகத்துப் பின்னர் “இடாப்பு” என குறிப்பீடு செய்யப்படும் ஒரு பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல் இடாப்பொன்று பேணப்படுதல் வேண்டும்; அது இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக 1990 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கை கடன் தகவல் பணியக சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை கடன் தகவல் பணியகத்தினால் பேணப்படுதல் வேண்டும். சொல்லப்பட்ட இலங்கை கடன் தகவல் பணியகச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட தத்துவங்களுக்கு மேலதிகமாக, பணியகமானது பின்வரும் தத்துவங்கள் கடமைகள் பணிகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் இடாப்பையும் அசைவுள்ள ஆதனங்களின் பிணைப்பொறுப்பு அக்கறையை அத்தகைய இடாப்பில் பதிவுசெய்யும் நடைமுறையையும் விதித்துரைக்கப்பட்ட விதத்தில் பேணுதல்;

(ஆ) 2 ஆம் பிரிவின் (அ), (ஆ), (இ), (ஈ) மற்றும் (உ) என்னும் விடயங்களில் குறித்துரைக்கப்பட்ட எவரேனும் ஆளினால் கோப்பிடப்பட்ட துணைமைப் பொருளிலான பிணைப் பொறுப்பு அக்கறையொன்றின் அறிவித்தலைப் பதிவு செய்தல்;

(இ) ஒரு தீர்ப்புக் கடன்கொடுநரின் அக்கறை அறிவித்தலொன்றைப் பதிவு செய்தல் ; அத்துடன்

(ஈ) அறிவித்தல் காலாவதியான திகதியிலிருந்து பத்தாண்டுக் காலப்பகுதியொன்றுக்கு எல்லாக் காலாவதியான அறிவித்தல்களினதும் பதிவைப் பேணுதல்.

(2) அசைவுள்ள பொருட்களின் பிணைப்பொறுப்பு அக்கறைகளின் பதிவு தொடர்பான தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் பணியகத்தின் அலுவலர்களாலும், சேவையாளர்களாலும் 1990 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கை கடன் தகவல் பணியகச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட இலங்கை கடன் தகவல் பணியகத்தின் பணிப்பாளர் சபையின் பணிப்புகளின்கீழ் நிறைவேற்றப்படுதல் வேண்டும் :

ஆயின், அசைவுள்ள பொருட்களின் பிணைப்பொறுப்பு அக்கறையின் பதிவு தொடர்பிலான தத்துவங்கள், கடமைகள் பணிகளை நிறைவேற்றுவதில் அத்தகைய அலுவலர்களும் சேவையாளர்களும் இச்சட்டத்தின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டவாறு காலத்துக்குக்காலம் ஆக்கப்படக்கூடிய அத்தகைய ஒழுங்கு விதிகளுக்கும் விதிகளுக்கும் அமைந்ததாதல் வேண்டும்.

8.(1) கோப்பிடப்படும் ஒவ்வோர் அறிவித்தலும் இலங்கை கடன் தகவல் பணியகத்தால் 7 ஆம் பிரிவின் நியதிகளின்படி பேணப்படும் இடாப்பில் பதியப்படுதல் வேண்டுமென்பதுடன் -

(i) ஆரம்ப அறிவித்தலொன்றாக இருக்குமிடத்து, எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அதற்கேயான கோப்பிலக்கமொன்றைக் குறித்தளித்தலும் வேண்டும் ;

(ii) ஆரம்ப அறிவித்தல் தவிர்ந்த ஒவ்வோர் அறிவித்தலுக்கும் ஒரு இலக்கத்தைக் குறித்தளித்தலும் வேண்டும் ;

(iii) கோப்பிடப்பட்ட பதிவுக்குக் குறித்தளிக்கப்பட்ட இலக்கத்தையும் தேதியையும் கோப்பிடப்பட்ட நேரத்தையும் கொண்டிருக்கும் பதிவேடொன்றை உருவாக்கப் பயன்படுதலும் வேண்டும் ;

(iv) பொதுமக்களால் பார்வையிடுவதற்காக கிடைக்கத்தக்கதாதலும் வேண்டும்.

(2) இடாப்பு, கடனாளியின் பெயர்கொண்டு, ஆரம்ப அறிவித்தலொவ்வொன்றினதும் அட்டவணையொன்றைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், ஆரம்ப அறிவித்தலொன்று தொடர்பான எல்லாக் கோப்பிடப்பட்ட பதிவுகளையும் ஆரம்ப அறிவித்தலைத் தொடர்புறுத்தும் வகையில் அட்டவணைப்படுத்தலும் வேண்டும்.

(3) பதிவேடொன்றானது, கடனாளியின் பெயர்கொண்டும், பதிவேடு தொடர்புறுத்தும் ஆரம்ப அறிவித்தலுக்குக் குறித்தொதுக்கப்பட்ட கோப்பு இலக்கங்கொண்டும், ஒரு பதிவேட்டையும் மற்றும் வேறு தொடர்புடைய பதிவேடுகளையும் மீட்கக்கூடியவாறாக அத்தகைய ஒரு வகையாகப் பேணப்படுதல் வேண்டும்.

(4) இடாப்பானது காலாவதியான அறிவித்தல்களின் பதிவுகளை காலாவதியான எத்திகதியில் அது அவ்வாறு காலாவதியாகியுள்ளதோ அத்திகதியின் பின்னர் பத்து ஆண்டு காலப் பகுதிக்குக் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) அறிவித்தலொன்றைப் பதிவுசெய்வதற்கு ஏற்றுக்கொள்ளுதல் அல்லது மறுத்தலானது, அவ்வறிவித்தலில் அடங்கியுள்ள ஏதேனும் தகவலின் அச்சொட்டாந் தன்மையை, மெய்மையை அல்லது வலிதுடைமையைப் பாதித்தலாகாது.

9. (1) தகவலுக்காக அலுவலகத்துக்கு விண்ணப்பிக்கும் எவரேனும் ஆளுக்குப் பின்வரும் தகவல்களை இலங்கை கடன்தகவல் பணியகம் கொடுத்துதவலாம் :-

(i) ஓர் உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினர் தொடர்பில் துணைமைப்பொருள்கொண்டு பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட ஒரு தனிசின் கிடைக்கப்பெறு நிலை பற்றியும் அத்தகைய கடனாளிபற்றிய விபரங்கள் பற்றியும் ஒரு குறிப்பிட்ட திகதியும் நேரத்தின்போதும் துணைமைப் பொருள்பற்றியும் ஆன தகவல்கள் ;

(ii) கோரிக்கை தொடர்புறுத்தும் அறிவித்தலின் கோப்பிலக்கமும், திகதியும், நேரமும் தொடர்பான தகவல் ;

(iii) கோரிக்கை தொடர்புறுத்தும் ஒவ்வொரு அறிவித்தலிலும் அடங்கியுள்ள தகவல்கள்.

(2) இலங்கை கடன்தகவல் பணியகத்துக்கு, பார்வையிடுவதற்கென ஒரு விண்ணப்பமொன்று முன்வைக்கப்படும்போது, விண்ணப்பதாரி, கடனாளிபற்றிய பின்வரும் தகவல்களைத் தருதல் வேண்டும் :-

(i) இயற்கை ஆளாகவும் இலங்கைப் பிரசையாகவும் இருக்கும் ஒரு கடனாளியின் தேசிய அடையாள அட்டை இலக்கமும் கூட்டிணைக்கப்பட்ட குழுமமொன்றின் விடயத்தில் அதற்கு ஏற்புடைத்தான பதிவிலக்கமும் ;

(ii) அத்தகைய ஒரு கடனாளி கூட்டிணைக்கப்பட்ட குழுமமாகவும் இலங்கைப் பிரசையாகவுமிருப்பின் அக்கடனாளியின் பெயர்;

(iii) கிடைக்கக்கூடியதாயிருப்பின், அறிவித்தலொன்றின் கோப்பிலக்கம்; அத்துடன்

(iv) எக்காரணங்களுக்காக அத்தகைய தகவல்கள் தேவைப்படுகின்றன என்பது.

(3) இலங்கை கடன் தகவல் பணியகம் தகவலை எம்மொழியிலும் பரிமாறலாம் :

ஆயின், கோரப்படுமாயின், இலங்கை கடன் தகவல் பணியகம் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் அதன் சார்பில் அதிகாரமளிக் கப்பட்ட ஓர் அலுவலரால் ஒப்பமிடப்பட்ட கோரப்பட்ட தகவலின் விபரங்களை உள்ளடக்கிய சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சான்றிதழ் சான்றாக ஏல்தக்க தாதலும் வேண்டும்; அத்துடன் அதில் கூறப்பட்ட நிகழ்வுகளின் முதற்றோற்றச் சான்றாதலும் வேண்டும்.

10. (1) இடாப்பில் எழுதப்பட்ட ஆவணம் ஒவ்வொன்றும் ஒரு பகிரங்க ஆவணமாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட ஒரு கொடுக்கல்வாங்கலில் துணைமைப்பொருள் தொடர்பாக தகவலைக் கோரும் எவரேனும் ஆள், விதித்துரைக்கப்படும் கட்டணமொன்றின் கொடுப்பனவின் மீது கோப்பிடும் அலுவலகத்தில் கோப்பிடப்பட்ட ஏதேனும் ஆவணத்தைப் பார்வையிடவும் அதன் பிரதிகளைப் பெறவும் உரித்துடையவராதல் வேண்டும்.

11. (1) ஒவ்வொரு ஆரம்ப அறிவித்தலும் பின்வருவனவற்றை அடக்கியிருத்தல் வேண்டும் :-

(i) கடனாளியின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தையும், பெயரையும் இலங்கையினுள் அவரது அஞ்சல் முகவரியையும் அத்துடன் ஒன்றிணைக்கப்பட்ட குழுமமொன்றின் விடயத்தில் அதற்கு ஏற்புடைத்தான பதிவிலக்கத்தையும் ;

(ii) உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினரின் அல்லது ஒன்றிணைக்கப்பட்ட குழுமமொன்றின் விடயத்தில் உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட முகவரொருவரின் தேசிய அடையாள அட்டை இலக்கமும் உத்தரவாதமளிக்கப் பட்ட தரப்பினரின் அல்லது அத்தகைய முகவரின் இலங்கைக்குள்ளான அஞ்சல் முகவரி ;

(iii) அறிவித்தலால் மேவப்பட்ட துணைமைப்பொருளின் விவரணம் ; அத்துடன்

(iv) இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட எவரேனும் ஆளின் கடனிறுதகைமையை சீர்தூக்கிப் பார்க்கத் தேவைப்படும் வேறேதேனும் குறித்துரைக்கப்படும் தகவல்கள் :

ஆயின், எவ்வாறாயினும் ஓர் அறிவித்தலானது, அத்தகைய துணைமைப்பொருள் எதிர்கால எதிர்பார்ப்புகளை அல்லது இணைப்புப் பொருளை அடக்குமாயின் இயைபான அசைவுள்ள ஆதனத்தின் விவரணத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) துணைமைப்பொருளொன்று கொண்டு ஒரு கடப்பாட்டை உத்தரவாதப்படுத்திக்கொண்ட ஓர் ஆள், ஆரம்ப அறிவித்தலொன்றைக் கோப்பிடுவதற்கு கடனாளி அதிகாரமளிக்குமிடத்து, அத்தகைய அறிவித்தலை கோப்பிட உரித்துடையவராதல் வேண்டும். அத்தகைய அதிகாரமளிப்பு எவ்வாறிருப்பினும் அறிவித்தலின் பாகமாக அமைதலாகாது.

(3) இச்சட்டத்தின் 2ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட எவரேனும் கடனாளி, பிணைப்பொறுப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட துணைமைப்பொருளையும் உடன்படிக்கைக்கு ஒப்பமிட்டதன்மூலம், அத்தகைய உடன்படிக்கையால் மேவப்பட்ட காலம் எவ்வாறிருப்பினும், துணைமைப் பொருளின் வரும்படிகள் ஏதேனுமிருப்பின் அதனையும் மேவுவதாக ஆரம்ப அறிவித்தலொன்றை கோப்பிடுவதற்கு அதிகாரமளித்தல் வேண்டும்.

(4) பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் ஒன்றில் ஈடுபடுமுன்னர் ஓர் ஆரம்ப அறிவித்தல் கோப்பிடப்படலாம்.

12. (1) வேறேதேனும் சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், அறிவித்தலொன்று -

(i) கடனாளி ஆளொருவராகவிருக்கின்ற விடயத்தில் அவ்வறிவித்தல் அத்தகைய ஆளின் பெயரையும் தேசிய அடையாள அட்டை இலக்கத்தையும் கொண்டிருக்கும் போதும் ;

(ii) கடனாளி இயற்கை ஆளொருவராகவும் இலங்கை பிரசையல்லாமலும் இருக்கின்ற விடயத்தில் அறிவித்தல் அத்தகைய ஆளின் பெயரை, அவரின் கடவுச்சீட்டில் குறித்துரைக்கப்பட்டவாறும் அக்கடவுச்சீட்டு வழங்கப்பட்ட இடத்தையும் ;

(iii) கடனாளி இயற்கை ஆளொருவராகவில்லாது கம்பனிச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட அல்லது வேறுவிதமாக வேறேதேனும் இலங்கைச் சட்டத்தின் நியதிகளின்படி ஆளொருவராக ஏற்றங்கீகரிக்கப்பட்டிருக்கின்ற விடயத்தில் அறிவித்தல் கம்பனிப்பதிவாளரால் பேணப்படும் இடாப்பில் குறித்துரைக்கப்பட்டிருப்பதுபோல கடனாளியின் பெயரை அல்லது வேறே தேனும் இலங்கைச் சட்டத்தினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட பெயரை;

(iv) கடனாளி, கம்பனிச் சட்டத்தின்கீழ் வியாபாரஞ் செய்யத் தகைமையுடைய இயற்கை ஆளொருவரல்லாத ஒரு வெளிநாட்டவராக இருக்கின்ற விடயத்தில் அறிவித்தல் கம்பனிகள் பதிவாளரால் பேணப்படும் இடாப்பில் குறித் துரைக்கப்பட்டவாறு கடனாளியின் பெயரை ; அல்லது

(v) இப்பிரிவின் (iv) ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட ஆளொருவர் தவிர்ந்த ஓர் ஆளாக கடனாளி இருக்கின்ற விடயத்தில் அறிவித்தல், அவ்வெளிநாட்டவர் பதிவு செய்யப்பட்ட நாட்டின் உரிய பதிவேட்டில் குறித்துரைக்கப்பட்டவாறு கடனாளியின் பெயரை,

தெளிவாக ஏற்பாடு செய்யின், வலிதும் பயனும் உடையதாதல் வேண்டும்.

(2) அறிவித்தலொன்று கடனாளியின் பெயரை அச்சொட்டாகத் தரும்போது, கடனாளியின் வியாபரப் பெயர் அல்லது வேறு பெயர் இல்லாமை அவ்வறிவித்தலை வலிதற்றதாக்காது :

ஆயின், அத்தகைய அறிவித்தல் கடனாளியின் பெயரை அச்சொட்டாகக் குறித்துரைக்கத் தவறினால் அது அத்தகைய அறிவித்தலை வலிதற்றதாக்குவதாதல் வேண்டும்.

(3) ஓர் அறிவித்தலில் ஆளொருவர் ஒன்றுக்குமேற்பட்ட கடனாளிகளினதும், ஒன்றுக்கு மேற்பட்ட உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினதும் பெயர்களை அளிக்கலாம்.

(4) உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினரின் முகவரொருவராக ஓர் ஆளின் அந்தஸ்தைக் குறித்துரைக்கத் தவறுதல் அத்தகைய அறிவித்தலை வலிதற்றதாக்காது.

## பாகம் III

### அறிவித்தலின் திருத்தம், தொடர்ச்சி, முடிவுறுத்துகை

13. (1) பிணைப்பொறுப்பு அக்கறை அல்லது கடப்பாடு வலிதாக நிலைத்திருக்கையில் கடப்பாடுகொளி துணைமைப் பொருள் தேவைப்பாட்டை விட்டுத்தள்ளுமிடத்து, பதிவேட்டில் கோப்பிடப்பட்ட ஆரம்ப அறிவித்தலானது, அத்தகைய விட்டுத்தள்ளுகைக்கு உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினரின் அறிவு அல்லது சம்மதம் பெறப்பட்டது அல்லது பெறப்பட்டிருக்கவில்லை என்பது எவ்வாறிருப்பினும் தொடர்ந்து வலிதும் பயனும் உடைத்தாதல் வேண்டும்.

(2) கோப்பிடப்பட்ட அறிவித்தலொன்று கடனாளியின் பெயர் மாற்றத்தால் பிறழ்வழியுய்ப்பதாகவுள்ளவிடத்து, அவ்வறிவித்த லானது கடனாளி பெயர் மாற்று முன்பு அல்லது பெயர் மாற்றியதிலிருந்து நான்கு மாதங்களுள் கடனாளியால் கொள்ளப்பட்ட துணைமைப் பொருளில் பிணைப்பொறுப்பு அக்கறையொன்றைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, வலிதும் பயனுடையதுமாகவிருத்தல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும் அத்தகைய அறிவித்தலானது, பெயர் மாற்றத் திகதியிலிருந்து நான்கு மாதங்களுள் இலங்கை கடன் தகவல் பணியகத்தின் கவனத்துக்கு அம்மாற்றம் கொண்டு வரப்படுமாயின் அத்தகைய மாற்றத் திகதியிலிருந்து நான்கு மாதங்களுக்குப் பின்னர் கடனாளியால் கொள்ளப்பட்ட ஒரு பிணைப்பொறுப்பு அக்கறையைப் பூர்த்தி செய்ய வலிதும் பயனுமுடையதாதல் வேண்டும்.

(3) கடனாளியின் பெயர் மாற்றத்தின்பின்னர் ஒரு அறிவித்தலானது, கடனாளியின் அச்சொட்டான விபரங்களை சூழ்நிலைகளின் மாற்றத்தால் வெளிக்காட்டாதுவிடின்தவிர,அது வலிதும் பயனுடையதாகவிருக்கும்.

14. (1) இச்சட்டத்தின்கீழ் கோப்பிடப்படும் ஒவ்வோர் அறிவித்தலும் அதன் வலிதுடைமைக்காலம், தொடர்ச்சிக் கூற்றொன்றை கோப்பிடுவதன்மூலம் நீடிக்கப்பட்டாலொழிய, கோப்பிடப்பட்ட திகதியிலிருந்து ஐந்து ஆண்டுக் காலப்பகுதியொன்றுக்கு வலிதுடையதாதல் வேண்டும்.

(2) ஓர் அறிவித்தலின் வலிதுடைமை காலாவதியாவதன்மீது அத்தகைய அறிவித்தலால் பூர்த்திசெய்யப்பட்ட பிணைப் பொறுப்பு அக்கறை, அறிவித்தலொன்றைக் கோப்பிடாது பிணைப்பொறுப்பு அக்கறை பூர்த்தி செய்யப்பட்டாலொழிய, வலிதற்றதாக வருதல் வேண்டும்.

(3) பிணைப்பொறுப்பு அக்கறையின் வலிதுடைமை காலாவதியாவதன்மீது பிணைப்பொறுப்பு அக்கறை வலிதற்றதாகவரின் பெறுமதிக்கான துணைமைப்பொருளொன்றின் முன்னைய அல்லது பின்னைய கொள்வனைகாரருக்கெதிராக ஒருபோதும் பூர்த்தி செய்யப்படவில்லையெனக் கருதப்படுதல் வேண்டும்.

15. (1) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட திருத்தங்கள்மூலம் ஓர் ஆரம்ப அறிவித்தல் திருத்தப்படலாம். திருத்தமொன்று -

(i) அத்தகைய அறிவித்தலுக்கு குறித்தளிக்கப்பட்ட அதற்கேயான கோப்பிலக்கத்தால் ஆரம்ப அறிவித்தலைக் கண்டறிதல் வேண்டும்;

(ii) அறிவித்தல் மீதான உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினரின் பெயரையும் திருத்தத்தை அங்கீகரிக்கும் ஆளின் பெயரையும் குறித்துரைத்தல் வேண்டும்;

(iii) அது அறிவித்தலுக்கான திருத்தமொன்றென எடுத்துக் காட்டுதல் வேண்டும்;

(iv) திருத்தப்பட்டவாறான அறிவித்தலைப் பிரதிபலிக்கும் ஒரு வகையில் ஆரம்ப அறிவித்தலொன்றில் தேவைப்படுத்தப்படும் இயைபான தகவல்கள் யாவற்றையும் அறிவித்தல் வேண்டும்.

(2) ஓர் அறிவித்தலால் மேவப்பட்ட துணைமைப் பொருளுக்கு அல்லது அறிவித்தலொன்றுக்கான கடனாளிக்கு திருத்தமானது சேர்வொன்றைச் செய்யுமிடத்து, அத்தகைய திருத்தத்தைக் கோப்பிடுவதற்கு எழுத்தில் கடனாளி அங்கீகரிப்பின் அத்தகைய திருத்தம் பயனுறுவதாதல் வேண்டும்.

(3) அறிவித்தலில் ஒன்றுக்கு மேற்பட்ட உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினர் குறித்துரைக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய திருத்தத்தைக் கோப்பிடுவதற்கு உத்தரவாதமளிக்கப்பட்ட ஒரு தரப்பினர் அங்கீகரிக்கப்பின் அத்திருத்தம் வலிதுடையதாதல் வேண்டும்.

(4) அறிவித்தலுக்கு துணைமைப்பொருளின் சேர்ப்பொன்றைச் செய்வதற்கான ஒரு திருத்தம், அவ்வாறு சேர்க்கப்பட்ட துணைமைப்பொருள் தொடர்பில் அத்தகைய திருத்தத்தைக் கோப்பிடும் திகதியிலிருந்து மட்டும் வலிதானதாதல் வேண்டும்.

(5) அறிவித்தலுக்கு கடனாளியின் பெயரொன்றைச் சேர்ப்பதற்கான ஒரு திருத்தம், அவ்வாறு சேர்க்கப்பட்ட கடனாளி தொடர்பில், அத்தகைய திருத்தத்தைக் கோப்பிடும் திகதியிலிருந்து மட்டும் வலிதானதாதல் வேண்டும்.

(6) திருத்தமொன்றை கோப்பிடுவதற்கு அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினர் எழுத்தில் அதிகாரமளிக்கின்றவிடத்து, துணைமைப்பொருளைச் சேர்க்க அல்லது கடனாளியைச் சேர்க்கவான ஒரு திருத்தந் தவிர்ந்த அத்தகையதொரு திருத்தம் வலிதுடையதாதல் வேண்டும்.

(7) திருத்தமொன்று, புதிய உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினரின் பெயரைக் கொடுக்காது உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினர் யாவரது பெயர்களையும் அடித்து நீக்குகின்றவிடத்து அல்லது கடனாளி ஒருவரின் பெயரை அடித்து நீக்குவதுடன் அறிவித்தலில் முன்னராகக் குறித்துரைக்கப்படாத கடனாளியொருவரின் பெயரைத் தரத்தவறுகின்றவிடத்து அது வலிதற்றதாதல் வேண்டும்.

(8) ஓர் அறிவித்தலில் ஒன்றுக்கு மேற்பட்ட உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினரிருக்குமிடத்து, ஒவ்வோர் உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினரும் ஒரு திருத்தத்தைக் கோப்பிட அங்கீகரிக்குமாறு தேவைப்படுத்தப்படலாம்.

(9) பதினோராம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, ஓர் அறிவித்தலின் வலிதுடைமைக் காலம் திருத்தமொன்று கோப்பிடப்படுவதன் காரணமாக நீடிக்கப்படுதலோ நீடிக்கப்படுவதாகக் கருதப்படுதலோ ஆகாது.

16. (1) அறிவித்தலொன்றின் வலிதுடைமைக்காலம் -

(i) ஆரம்ப அறிவித்தலை அதற்கேயான கோப்பிலக்கத்தால் கண்டறியும் ;

(ii) தொடர்ச்சிக்கூற்றுக்கு அதிகாரமளிக்கும் அறிவித்தலிலுள்ள ஓர் உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினரைக் கண்டறியும்; அத்துடன்

(iii) கோப்பிட அங்கீகாரமளித்த உத்தரவாதமளித்த தரப்பினர் தொடர்பில் அறிவித்தலின் வலிதுடைமை நீடிப்பை குறித்து நிற்கும்,

தொடர்ச்சிக் கூற்றொன்றை கோப்பிடுவதன்மூலம் நீடிக்கப்படலாம்.

(2) ஒரு தொடர்ச்சிக்கூற்று அறிவித்தலின் ஐந்து ஆண்டுகாலம் காலாவதியாவதற்கு முன்னராக ஆறு மாதங்களுக்குள் கோப்பிடப்படலாம் என்பதுடன், இதனகத்துக் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் தொடர்ச்சிக் கூற்று கோப்பிடப்பட்டதன்மீது, அறிவித்தலின் வலிதுடைமையானது, எத்திகதியன்று அது வலிதற்றதாக வரக்கூடுமோ அத்தேதியிலிருந்து தொடங்கி மேலும் ஓர் ஐந்தாண்டு காலத்துக்கு தொடருதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறு நீடிக்கப்பட்ட ஐந்தாண்டுக்காலம் காலாவதியாவதன்மீது, அத்தகைய அறிவித்தலின் வலிதுடைமையானது, அது காலாவதியாவதற்கு முன்னராக உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினரால் அதிகாரமளிக்கப்பட்ட இன்னுமொரு தொடர்ச்சிக்கூற்று கோப்பிடப்பட்டாலொழிய காலாவதியாதல் வேண்டும். ஓர் அறிவித்தலின் வலிதுடைமையானது தொடர்ச்சிக் கூற்றொன்றைக் கோப்பிடுதற்கு அதிகாரமளித்த உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினர் தொடர்பில் மட்டும் தொடருவதாதல் வேண்டும்.

(4) அடுத்தடுத்த தொடர்ச்சிக்கூற்றுகள் அறிவித்தலின் வலிதுடைமையைத் தொடருவதற்கு அதேவகையில் கோப்பிடப்படலாம்.

17. (1) ஓர் அறிவித்தலின் வலிதுடைமையானது விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் முடிவுறுத்தற் கூற்றொன்றைக் கோப்பிடுவதன்மூலம் முடிவுறுத்தப்படலாம்.

(2) ஒரு கடனாளியிடமிருந்து எழுத்திலான கோரிக்கையொன்றைப் பெற்றுக் கொண்டதன் மீது -

(அ) பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கடப்பாடு எஞ்சிநிற்கவில்லையெனின்;

(ஆ) முற்பணம் கொடுக்கப் பொருந்திக் கொண்டிராதவிடத்து; அத்துடன்

(இ) கடனாளியால் ஓர் அறிவித்தலைக் கோப்பிடுவதற்கு எழுத்திலான அங்கீகாரமிருப்பின்,

உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினர் முடிவுறுத்தற் கூற்றொன்றைக் கோப்பிடலாம்.

18. (1) ஓர் ஆரம்ப அறிவித்தல், திருத்தம், தொடர்ச்சிக்கூற்று அல்லது முடிவுறுத்தற்கூற்று அது இடாப்பில் பதிவுசெய்யப்பட்ட திகதியிலிருந்து வலிதுடையதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) இலங்கை கடன் தகவல் பணியகமானது-

(i) ஏதேனும் ஆவணம் ஆரம்ப அறிவித்தலொன்றாகவிருந்து அது கடனாளியின் பெயரைத்தரத் தவறுமிடத்து;

(ii) ஏதேனும் ஆவணம் திருத்தமொன்றாகவிருந்து, அப் பதிவு கடனாளியின் பெயரைத் தரத் தவறுமிடத்து ;

(iii) ஏதேனும் ஆவணம் தொடர்ச்சிக் கூற்றொன்றாகவிருந்து அப்பதிவு ஆரம்ப அறிவித்தலின் கோப்பிலக்கத்தைத் தரத் தவறுமிடத்து அல்லது முதல் ஆரம்ப அறிவித்தல் காலாவதியான திகதியிலிருந்து ஆறு மாத காலத்தினுள் அதனைத் தரத் தவறுமிடத்து;

(iv) ஏதேனும் ஆவணம் முடிவுறுத்தற் கூற்றொன்றாகவிருந்து அப்பதிவு ஆரம்ப அறிவித்தலின் கோப்பிலக்கத்தை தரத்தவறுமிடத்து அல்லது அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட பெயர்கொண்ட ஒவ்வோர் உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினர் தொடர்பிலும் அறிவித்தல் காலாவதியானவிடத்து; அத்துடன்

(v) கடப்பாட்டினன் தேவைப்படுத்தப்பட்ட கட்டணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து அல்லது காலத்துக்குக் காலமான கட்டணக் கொடுப்பனவுக்காக ஏற்பாடெதுவும் செய்யப்பட்டிராதவிடத்து,

அவ்வாவணத்தை பதிவு செய்வதற்கு ஏற்க மறுக்கலாம்.

(3) இச்சட்டத்தில் தரப்பட்ட காரணங்கள் தவிர்ந்த காரணங்களுக்காக இலங்கை கடன் தகவல் பணியகம் ஒரு பதிவை ஏற்க மறுக்குமிடத்து கோப்பில் பதிவு இல்லாமையின்மீது நியாயமாகத் தங்கி பெறுமதியைக் கொடுப்பதான துணைமைப் பொருளொன்றின் கொள்வனைக்கெதிராகத் தவிர, அத்தகைய பதிவு கோப்பிடப்பட்ட பதிவொன்றாக வலிதுடையதாதல் வேண்டும்.

(4) இலங்கை கடன் தகவல் பணியகக் கோப்பிடுவதற்கு பதிவொன்றை ஏற்கமறுக்குமிடத்து, அப்பதிவைச் சமர்ப்பிக்கும் ஆளுக்கு அதன் மறுப்புக்கான காரணம் ஏதேனும் இருப்பின், அக்காரணங்களுடன் அத்தகைய நிகழ்வை உடனும் அறிவித்தல் வேண்டும்.

(5) அறிவித்தலிலுள்ள ஒரு உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினரால் அங்கீகரிக்கப்பட்ட ஓர் அறிவித்தல், அறிவித்தலிலுள்ள வேறோர் உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினரின் உரிமைகளைப் பாதித்தல் ஆகாது.

19. (1) ஆளொருவர், அவரது பெயர் அச்சொட்டாகவல்லாது அல்லது தவறாக ஆரம்ப அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ளதென நம்புவதற்கு காரணமுள்ளவிடத்து அவர் அத்தகைய நிகழ்வை இலங்கை கடன் தகவல் பணியகத்தின் அறிவுக்குக்கொண்டுவருவதற்கு உடனடியாக நடபடி எடுத்தல் வேண்டுமென்பதுடன் இலங்கை கடன் தகவல் பணியகம் அவ்விடயத்தைக் கருத்துக்கெடுத்ததன்மீது அதற்கிணங்க பெயரைப் பிழைதிருத்துதலும் வேண்டும்.

(2) ஒரு பிழைதிருத்தத் கூற்று -

(அ) ஆரம்ப அறிவித்தலுக்குக் குறித்துரைக்கப்பட்ட கோப்பிலக்கத்தால் பிழை திருத்தக்கூற்று தொடர்புறுத்தும் பதிவை அடையாளங்காட்டலாம்;

(ஆ) அது ஒரு பிழைதிருத்தக் கூற்று எனச் சுட்டிக்காட்டலாம்;

(இ) அத்தகைய கூற்று அச்சொட்டற்றது என நம்புவதற்கான அடிப்படையான காரணத்தையும் அத்தகைய கூற்றைத் திருத்தும் விதத்தையும் எடுத்துரைக்கலாம்; அத்துடன்

(ஈ) அறிவித்தலானது விற்கப்பட்ட எக்கணக்குகளையும் பண்டம்பணிப் பத்திரத்தையும் கடனாளி அல்லது கடப்பாடுடைய வேறு ஆள் அதன் கடப்பாட்டைத் தீர்த்து விட்டதோ அக்கணக்குகளையும் பண்டம் பணிப் பத்திரத்தையும் மேவி நிற்பதாகச் சுட்டிக்காட்டலாம்.

(3) ஒரு முடிவுறுத்தல் கூற்று, அறிவித்தலிலுள்ள உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினரின் அக்கறையை, அவ்வுத்தரவாத மளிக்கப்பட்ட தரப்பினரால் எழுத்தில் அம்முடிவுறுத்தல் கூற்று அதிகாரமளிக்கப்பட்டிருப்பின் மட்டும், பயனுறும்வகையில் முடிவுறுத்தும். பயனுறும் முடிவுறுத்தல் கூற்று ஒன்று கோப்பிடப்பட்டதன்மீது எவ்வறிவித்தலை அம்முடிவுறுத்தற் கூற்றுத் தொடர்புறுத்துகின்றதோ அவ்வறிவித்தல், அதற்கு அதிகாரமளிக்கும் உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினர் தொடர்பில் பயனற்றதாக வரும்.

20. (1) இலங்கை கடன் தகவல் பணியகம் ஏதேனும் அறிவித்தலின் பதிவை, ஒரு திருத்தத்தை, தொடர்ச்சிக் கூற்றை அல்லது முடிவுறுத்தற் கூற்றை பதிவு செய்வித்தல் வேண்டும்.

(2) இலங்கை கடன் தகவல் பணியகத்தில் பதிவு செய்தலானது, துணைமைப் பொருளொன்று தொடர்பான ஈடு ஒன்று உள்ளமை அல்லது இல்லாமை பற்றிய இறுதியானதும் முற்றானதுமான சான்றாக அமைதல் வேண்டும்.

(3) இலங்கை கடன் தகவல் பணியகம் ஏதேனும் அறிவித்தலை, திருத்தத்தை, தொடர்ச்சிக் கூற்றை அல்லது முடிவுறுத்தற் கூற்றை பதிவுசெய்ய மறுக்கின்றவிடத்து, அத்தகைய பதிவுசெய்தற்காக விண்ணப்பிக்கும் ஆளுக்கு அதற்கான காரணத்தை எழுத்தில் அது அறிவித்தல் வேண்டும்.

(4) அறிவித்தலிலுள்ள ஒரு உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினரால் அதிகாரமளிக்கப்பட்டதும் கோப்பிடப்பட்டதும் ஆன அறிவித்தலொன்று மற்றொரு தரப்பினரின் உரிமைகளைப் பாதித்தலாகாது.

(5) கோப்பிடப்பட்ட அறிவித்தல் பிழையான தகவல்களைக் கொண்டுள்ளதென அறிவிக்கும் எவரேனும் ஆள், உடனே அப்பிழையை திருத்தி ஒரு ஆவணத்தைக் கோப்பிடுதல் வேண்டும்.

21. (1) இலங்கை கடன் தகவல் பணியகத்தில் கோப்பிடப்பட்ட ஏதேனும் அறிவித்தல் தொடர்பில் எவரேனும் ஆளுக்கு விதித் துரைக்கப்பட்ட தகவல்களைக் கொடுத்துதவுவது அதனது கடமையாதல் வேண்டும்.

(2) இலங்கை கடன் தகவல் பணியகம் தேவைப்படுத்தப்பட்ட தகவல்களைக் கொண்டுள்ள விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் சான்றிதழொன்றை வழங்கலாமென்பதுடன், விதிகளில் குறித்துரைக்கப்பட்ட விதமாக ஆவணங்களைப் பேணவுஞ் செய்யலாம்.

## பாகம் IV

### நானாவிதம்

22. (1) இலங்கை கடன் தகவல் பணியம் நிருவாகம், முகாமை, ஆவணங்களைப் பேணுதல் தொடர்பான நடவடிக்கைமுறை தொடர்பிலும் அதன் அலுவல்களை இச்சட்டத்தின் நியதிகளின்படி கொண்டுநடாத்த பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறை தொடர்பிலும் விதிகளை ஆக்கலாம்.

(2) இலங்கை கடன் தகவல் பணியகத்தால் ஆக்கப்படும் ஏதேனும் விதி வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

23. (1) இச்சட்டத்தின் கொள்கைகளையும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றும் அல்லது அவற்றுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத் துக்காக அல்லது இச்சட்டத்தினால் எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படத் தேவைப்படுத்தப்பட்டுள்ளதோ அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ, பின்வருவன உட்பட, அவை தொடர்பில் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :-

(i) வழங்கப்படும் சேவைகளுக்காக விதிக்கப்படவேண்டிய கட்டணத்தொகைகளையும், 7 ஆம் பிரிவின் நியதிகளின்படி இடாப்பைப் பேணும் பணியைக் கொண்டு நடாத்தும் விதம் மற்றும் அத்தகைய இடாப்பில் உட்படுத்தப்படவேண்டிய விடயங்கள் உட்பட அத்தகைய கட்டணத்தைச் சேகரிக்கும் முறையும்

(ii) இலத்திரன் பதிவேடுகளைப் பயன்படுத்தும் முறை உட்பட தேடுதலை நடாத்தும் விதம்;

(iii) அறிவித்தல்களையும் தேவைப்படும் தகவல்களையும் சமர்ப்பிக்கும் படிவம் ;

(iv) தீர்ப்புக் கடன்கொடுநரின் விபரமும், அசைவுள்ள ஆதனத்தின் விபரமும் ; தீர்ப்புக் கடன் கொடுநருக்கு ஆன கொடுப்பனவு அல்லது நிறைவேற்றத்தை நாடி நிற்கும் ஆளின் விபரம் பிணைப்பொறுப்பின் விபரங்களும் அறிவித்தலும்.

(2) அமைச்சரால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அது வெளியிடப்படும் திகதியன்று அல்லது அதில் குறித்துரைக்கப்படும் அத்தகைய பிந்திய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் வசதிப்படக்கூடிய விரைவாக பாராளுமன்றத்தின்முன் அங்கீகாரத்துக்காக முன்வைக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, அங்கீகாரம் மறுக்கப்பட்ட திகதியிலிருந்து நீக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு நீக்கப்பட்டதாகக் கருதப்படும் திகதிபற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

24. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

25. இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி -

"சாட்டுதல் செய்தல்" என்பது, ஒரு கணக்கில், பண்டம்பணிப் பத்திரத்தில், ஆவணத்தில், சாதனத்தில் உள்ள ஏதேனும் உரிமை அல்லது கொடுப்பனவுக்கான வேறு உரிமை முழுவற்றையும் அல்லது அதன் பாகத்தை ஓர் ஆளிலிருந்து இன்னொருவருக்கு கைமாற்றுதல் என்று பொருளாகும்;

"பண்டம்பணிப் பத்திரம்" என்பது, ஒரு தனிசை உருவாக்கும் அத்துடன் பண்டத்தில் பிணைப்பொறுப்பு அக்கறையொன்றை அல்லது குத்தகையொன்றை உருவாக்கும் பதிவு என்று பொருளாகும்;

"இலங்கை கடன் தகவல் பணியகம்" என்பது, 1990 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கை கடன் தகவல் பணியக சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை கடன் தகவல் பணியகம் என்று பொருளாகும்

"துணைமைப்பொருள்" என்பது, பிணைப்பொறுப்பு அக்கறையொன்றுக்கு அமைந்த ஆதனம் எனப்பொருளாவதுடன், ஏதேனும் தன்மையதான அசைவுள்ள பொருள்கள், ஏதேனும் தன்மையதான தொட்டறியவியலாப் பொருள்கள், பண்ணை உற்பத்திகள், பொருத்தப்பட்டவைகள், வெட்டப்படவுள்ள மரக்குற்றிகள், பிழிந்தெடுக்கப்படவுள்ள கனிமங்களையும் உள்ளடக்கவும் கூடும். இப்பதமானது எதிர்காலத்தில் எழக்கூடிய துணைமைப்பொருளையும் இலங்கைக்குள் அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள துணைமைப் பொருளையும் உள்ளடக்கும். மேலும் இப்பதமானது விற்பனை செய்யப்பட்ட கணக்குகள் பண்டம்பணிப் பத்திரத்தையும் குத்தகைப் பண்டங்களையும் வரும்படிகளையும் உள்ளடக்கும்;

"தீர்ப்புக் கடன்கொடுநர்" என்பது,-

(i) நீதிமன்றக் கட்டளையொன்றால் அல்லது 2006ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம் தவிர்ந்த உளதாம் சட்டத்தின்கீழான ஏதேனும் அதிகாரத்தினால் ஓர் உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினரின் துணைமைப்பொருளில் உரிமையொன்றை அல்லது ஓர் உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினரின் துணைமைப்பொருளை கைப்பற்றுவதற்கான உரிமையொன்றைப் பெறுகின்ற ஆளொருவர் ;

(ii) 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் ஒடுக்குவோன் ;

(iii) (97 ஆம் அத்தியாயமான) கடனிறுக்க வகையறு சட்டத்தின்கீழ் பெறுவோன் ; அத்துடன்

(iv) ஒரு முன்னுரிமைக் கடன் கொடுநர்,

என்று பொருளாகும் ;

"அறிவித்தல்" என்பது, இலங்கை கடன் தகவல் பணியகத்தால் பேணப்படும் இடாப்பில் கோப்பிடப்பட்ட பதிவு அல்லது கோப்பிடுவதற்கெனச் சமா்ப்பிக்கப்பட்ட பதிவு என்று பொருளாகும் என்பதுடன் கோப்பிடப்பட்ட அல்லது கோப்பிடச் சமா்ப்பிக்கப்பட்ட திருத்தங்கள், தொடர்ச்சிக் கூற்று மற்றும் முடிவுறுத்தற் கூற்றுக்களை உள்ளடக்கும். ஓர் "ஆரம்ப அறிவித்தலானது" எவ்வறிவித்தலுடன் ஒரு திருத்தம், தொடர்ச்சிக் கூற்று, முடிவுறுத்தற் கூற்று அல்லது பிழைதிருத்தக்கூற்று தொடர்புறக்கூடுமோ அவ்வறித்தலாகும்

"தேசிய அடையாள அட்டை" என்பது, 1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஆட்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் ஏற்பாட்டின்கீழ் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை என்று பொருளாகும்

"வரும்படிகள்" என்பது,-

(i) துணைமைப் பொருளின் விற்பனை, குத்தகை, உரிமம், கொடுத்துமாற்றல் அல்லது வேறு கையுதிர்ப்பின்மீது பெற்றுக்கொள்ளப்படும் எதுவும்;

(ii) துணைமைப்பொருள் கொண்டு சேகரிக்கப்படும் அல்லது அது தொடர்பாக பகிரப்படும் எதுவும்;

(iii) துணைமைப் பொருளிலிருந்து எழும் உரிமைகள்;

(iv) துணைமைப் பொருளின் பெறுமதியளவு, துணைமைப் பொருளின் இழப்பு, இயைபற்றமை, குறைபாடு, சேதத்திலிருந்து எழும் கோரிக்கை; அத்துடன்

(v) துணைமைப் பொருளின் பெறுமதியளவும் கடனாளிக்கு அல்லது உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினருக்குச் செலுத்தப்படற்பாலதான அளவு துணைமைப் பொருளுக்கு ஏற்பட்ட இழப்பு அல்லது இயைபற்றமை, குறைபாடு, சேதம் காரணமாக செலுத்தப்படற்பாலதான காப்புறுதி ;

"உத்தரவாதமளிக்கப்பட்ட தரப்பினர்" என்பது, எவ்வாளுக்கு கணக்குகள், பண்டம்பணிப் பத்திரம் விற்கப்பட்டனவோ அவ்வாள், அத்துடன் பண்டங்களின் ஒரு குத்தகைக்காரன் உட்பட ஒரு கடன்கொடுநர், விற்பனையாளன் அல்லது எவர் சார்பாக பிணைப்பொறுப்பு உடன் படிக்கையொன்றின் கீழ் ஒரு பிணைப்பொறுப்பு அக்கறை உருவாக்கப்பட்டுள்ளதோ அவ்வாள் என்று பொருளாகும் ;

"பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்" என்பது, சட்டத்தின் 2 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் கொடுக்கல் வாங்கல் எனப் பொருளாகும் ;

"பெறுமதி" என்பது, ஆளொருவர் -

(i) பணம் பெறப்படினும் அல்லாவிடினும், கடனளிக்க பொருந்திக் கொண்டமைக்கு மாற்றாக; அல்லது

(ii) முழு அளவிலோ அல்லது பகுதியாகவோ முன்னுள்ளதாம் கோரிக்கைக்கு பிணைப் பொறுப்பாக அல்லது அதனைத் திருப்தி செய்வதாக; அல்லது

(iii) கொள்வனைக்காக முன்னுளதாம் ஒப்பந்தத்தைப் பின்பற்றி ஒப்படைப்பை ஏற்றுக்கொள்வதன் மூலம் அல்லது

(iv) கொடுத்துமாற்றலாக கொடுக்கப்பட்ட எதற்கும் அல்லது ஏதேனும் வாக்குறுதிக்குப் பிரதி பயனாக, உரிமைகளைப் பெறுமிடத்து அவர் கொடுக்கும் பெறுமதியாகும்.

**2009ஆம் ஆண்டின் 55ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதிய (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்**

[2009ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

**தேசிய அரசப் பேரவையின் 1975ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதிய (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

1. இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதிய (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் தேசிய அரசுப் பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதிய (விசேட ஏற்பாடுகள்) சட்டமானது அதன் 2ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றதென்பதுடன், அவை, அச்சட்டத்தின் 2அ, 2ஆ 2இ மற்றும் 2ஈ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"செல்லுபடியாக்குல்.

2அ. தொழில்தருநர் அல்லது ஊழியர் ஒருவர் 1996, பெப்புருவரி 1 ஆம் தேதியன்று தொடங்கு கின்றதும் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியின்போது 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாயநிதியச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட சகாய நிதியத்திற்கு உதவு தொகையொன்றை செலுத்துகின்றவிடத்து, அத்தகைய உதவுதொகை நிதியத்திற்கு செல்லுபடியான முறையில் கழிக்கப்பட்டுள்ளதாக, செய்யப்பட்டுள்ளதாக அல்லது செலுத்தப்பட்டுள்ளதாக கருதப்படுதல் வேண்டும்.

மேலும் நன்மை பயக்கும் வயோதிப வேதன அனுகூலங்களுக்கான அங்கீகாரம்

2ஆ. (1) இதனகத்துப்பின்னர் "இயைபான தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும் இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஏதேனும் மருவிய தொழிலில் ஊழியரொருவராகின்ற ஆளொருவர், தொழில்தருநர்களாலும் மற்றும் ஊழியர்களாலும் உடன்பட்டுக் கொள்ளப்படக்கூடியவாறும் ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஊழியர் சகாய நிதியத்தைவிட மேலும் நன்மை பயக்கின்ற ஓய்வூதியநிதியமொன்று அல்லது செயற்திட்டமொன்று என்ற வகையாக 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ், விதித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளை, பிரேரிக்கப்பட்ட ஓய்வூதிய நிதியம் அல்லது செயற்றிட்டம் திருப்திசெய்கின்றதென தொழில் ஆணையாளர் திருப்தியடையின், வயோதிப வேதன அனுகூலங்களை பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும். அத்தகைய விடயத்தில் தொழில் ஆணையாளர், அத்தகைய நிதியத்தை அல்லது செயற்றிட்டத்தை முறையே அங்கீகரிக்கப்பட்ட உதவுதொகையளி ஓய்வூதிய நிதியமொன்றாக அல்லது செயற்றிட்டமொன்றாக வெளிப்படுத்தல் வேண்டும்.

(2) தொழில் ஆணையாளர் (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி நிதியத்தை அல்லது செயற்றிட்டத்தை அங்கீகரிக்கப்பட்ட உதவுதொகையளி ஓய்வூதிய நிதியமொன்றாக அல்லது செயற்றிட்டமொன்றாக வெளிப்படுத்துமிடத்து, இயைபான தேதியிலிருந்து அத்தகைய நிதியத்திற்கு அல்லது செயற்றிட்டத்திற்கு செலுத்தற்படற்பாலனவையும் திரட்டப்பட்டவையுமான எல்லா உதவுதொகைகளும் செல்லுபடியானமுறையில் செலுத்தப்பட்டுள்ளதாக கருப்படுதல் வேண்டும்.

சந்தேகங்களைத் தவிர்த்தல்

2இ. (1) சந்தேகத்தைத் தவிர்ப்பதற்காக, 1996, பெப்புருவரி 1 ஆம் திகதிக்கு முந்திய ஏதேனும் காலப்பகுதியின்போது வயோதிப வேதன அனுகூலங்களை வழங்குவதற்கு அல்லது பெற்றுக் கொடுப்பதற்கு அல்லது 2அ என்னும் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதி தொடர்பில் எவரேனும் தொழில்தருநருக்கு அல்லது ஊழியருக்கு 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலாகாது என இத்தால் வெளிப்படுத்தப் படுகின்றது.

(2) ஊழியர் ஒருவர் 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாயநிதியச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஊழியர் சகாய நிதியம் தவிர்ந்த ஏதேனும் சகாய நிதியத்தின், ஓய்வூதிய நிதியத்தின் அல்லது வேறு ஏதேனும் வயோதிப வேதன நிதியத்தில் அல்லது செயற்றிட்டத்தில் உறுப்பினரொருவராக வருமிடத்து அல்லது அத்தகைய எதற்கும் உதவு தொகையொன்றை செலுத்தியுள்ளவிடத்து அத்தகைய உறுப்பாண்மையும்

கொடுப்பனவுகளும் விடயத்துக்கேற்ப, எத்தேதியில் அவ்வூழியர் ஓர் உறுப்பினராக வருகின்றரோ அல்லது உதவு தொகையைச் செலுத்துகின்றாரோ அத்தேதியிலிருந்து செல்லுபடியான முறையில் செய்யப்பட்டுள்ளனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட சகாய நிதியம் முதலியவற்றுக்கு உதவு தொகையைத் தொடர்ந்து செலுத்துதல்

2ஈ. சந்தேகங்களைத் தவிர்ப்பதற்காக, இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும்-

(அ) 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஊழியர் சகாய நிதியம் தவிர்ந்த ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட சகாய நிதியத்துக்கு, ஓய்வூதிய நிதியத்துக்கு அல்லது வேறேதேனும் வயோதிப வேதன நிதியத்துக்கு அல்லது செயற்றிட்டத்துக்கு இச்சட்டம் தொடங்குவதற்கு முன்னர் உதவுதொகை செலுத்தியுள்ள தொழில்தருநர் ஒருவர் அல்லது ஊழியர் ஒருவர், அத்தகைய நிதியத்துக்கு அல்லது திட்டத்துக்குத் தொடர்ந்தும் உதவுதொகை செலுத்துவதும்; அத்துடன்

(ஆ) 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஊழியர் சகாய நிதியம் தவிர்ந்த ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட சகாய நிதியத்துக்கு, ஓய்வூதிய நிதியத்துக்கு அல்லது வேறேதேனும் வயோதிப வேதன நிதியத்துக்கு அல்லது செயற்றிட்டத்துக்கு இச்சட்டம் தொடங்கிய பின்னர் எவரேனும் தொழில்தருநர் அல்லது ஊழியர் உதவுதொகை செலுத்துவதும்,

சட்டமுறையானதாதல் வேண்டுமென மேலும் வெளிப்படுத்தப்படுகின்றது.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "ஆறு மாதங்களுக்கு மேற்படாத" மற்றும் ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத என்னும் சொற்களுக்குப் பதிலாக முறையே "பன்னிரெண்டு மாதங்களுக்கு மேற்டாத" மற்றும் "பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்படாத" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

4. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

15.2.2010

# பகுதி IV


பக்கம்

1. 2009ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டம் I

2. 2009ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம் VI

3. 2009ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் VIII

4. 2009ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, சேர் பெறுமதிவரி (திருத்தச்) சட்டம் VIII

5. 2009ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டம் XIV

6. 2009ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க, பற்றுக்கள் வரி (திருத்தச்) சட்டம் XV

7. 2009ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம் XVI

8. 2009ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் XVIII

9. 2009ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டம் XXVI

10. 2009ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க, இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழு (திருத்தச்) சட்டம் XXVII

11. 2009ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க, பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல் சட்டம் XXVIII

12. 2009ஆம் ஆண்டின் 55ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதிய (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் XXXVII